
# காஞ்சி

அண்ணாதுரை











20.11.1967

விலை 20 காசு

19-11-67

வீரராக வாழ்ந்து—வீரராக மறைந்து இன்றளவும் நமது இதயத்தில் வீரராகவே திகழ்பவர் முத்துராமலிங்கத்தேவர் அவர்கள்!

வங்காளத்திற்கும் தமிழகத்திற்கும் மொழியுணர்வில் தொடர்பு இருக்கிறது. தமிழகத்தில் மொழிப் போராட்டம் நடைபெற்றபோது — மக்கள் துள்ளி எழுந்து மொழியுணர்வைக் காட்டியபோது வங்கத்திலும் அதுபோன்ற மொழியுணர்விற்கான அறிகுறி இருந்தது என்பதை நாடு உணர்ந்திருந்தது.

மொழியில் தொடர்பு இருந்ததுபோலவே வீரத்திலும் தொடர்பு இருந்தது. வங்கத்தில் ஒரு சுபாஸ்சந்திரபோஸ் என்றால் தமிழகத்தில் முத்து ராமலிங்கத்தேவர் இருந்தார்.

அந்த வகையில் தேவர் அவர்கள் தமிழகத்தின் நேதாஜியாகவும் — சுபாஷ்சந்திரபோஸ் வங்காளத்தின் தேவராகவும் விளங்கியதை யாரும் மறுத்திட முடியாது.

இந்த மாநிலத்திலுள்ள மறவர் குடிமக்கள் எல்லாம் தேவர் அவர்களுக்கு விழா எடுக்கக் கடமைப்பட்டுள்ளார்கள், மறவர் என்று ஒரு ஜாதியை மட்டும் நான் குறிக்கவில்லை. தேவரின் வாழ்க்கை தரும் பாடத்தைப் பெற்று யார் யார் நெஞ்சில் வீரம் பொங்குகிறதோ அவர்கள் எல்லாம் மறவர்கள் என்ற பொருளில் கூறுகிறேன்.

தேவர் அவர்கள் இன்று உருவ அளவில் நம்மிடையே இல்லாவிடினும் உணர்வு அளவில் இருக்கிறார். நமது ரத்தத்தில், துடிப்புள்ள நாடி நரம்புகளில் அவர் குடிகொண்டிருக்கிறார்.

அவரால் ஆளாக்கப்பட்டவர்கள், இன்றைய தினம் காங்கிரசிலுள்ள பல தலைவர்கள். இந்தச் செய்தியெல்லாம் தமிழகத்திற்குச் சரிவரத் தெரியாமலிருக்கிறது.

தேவர் அவர்களின் வரலாற்றை எழுதுவதன் மூலம் இதுபோன்ற உண்மையான நிகழ்ச்சிகள் வெளியாகும். அவ்விதம் தேவர் அவர்களின் வீர வரலாறு எழுதப்படவிருக்கிறது என்றதகவலை சுத்தானந்த பாரதியார் கூறினார்.

பொதுவாக விழாக்களில் இப்படிப்பட்ட தகவல்கள் தெரிவிக்கப்படுவதுண்டு. பெரியார்களின் விழாக்களில் சிலை அமைப்பதுபற்றிப் பேச்சு வரும்; வரலாற்று நூல் எழுதுவதுபற்றிப் பேச்சு வரும்; அவர் கொள்கைபற்றி—அவரது கொள்கை வழி நிற்பதுபற்றி பேச்சு வரும்.

அத்தோடு சரி, பிறகு மீண்டும் அடுத்த விழாவில்தான் அதைப்பற்றிப் பேசுவார்கள்!

ஒருவேளை சொல்வதையெல்லாம் செய்து முடித்துவிட்டால் அடுத்த விழாவில் பேசுவதற்குப் பொருள் இல்லாமல் போய்விடுமே என்ற அச்சத்தில் விட்டுவிடும் பண்பாடு தமிழகத்தில் இருந்து வருகிறது.

அந்த விசித்திர பண்பாடு இந்த கடற்கரை காற்றில் மறைந்து போகட்டும்!

தேவர் அவர்களின் வரலாற்றைக் கூறும் வீர மகாகாவியம் செயல் உருவில் வெளிவரட்டும்!

அப்படி அந்த வரலாறு வெளிவரும்போது— அந்த நூலை நான்தான் வெளியிட வேண்டும் என்று சுத்தானந்த பாரதியார் கூறினார். ஆனால் —நூலை வெளியிடுவது சுலபம், அதை எழுதுவது தான் கடினம்.

# வாழவிடவில்லை?

அந்த நூலை எழுதுவதற்கு வெளியிடுவதற்கு அரசாங்கம் என்னென்ன உதவி செய்யவேண்டுமோ அந்த உதவிகள் அனைத்தையும் செய்ய இந்த தமிழக அரசாங்கம் தயாராயிருக்கிறது என்பதை அரசாங்கத்தின் ஒரு அங்கம் என்ற முறையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முத்துராமலிங்கம் என்ற பெயரே இரண்டு தத்துவங்களை வெளியிடுகிறது.

வெள்ளையரை எதிர்த்து வீரம் விளைவித்த வடுகநாதரை பற்றிக் கூறினார்கள். அவரது முழுப் பெயர் முத்து வடுகநாதர்! முத்து என்ற பெயரைக் கொண்டதன் மூலம் தேவர் அந்த வீரத்தைப் பிரதிபலிப்பவராக இருந்தார்.

ராமலிங்கம் என்பது அமைதியைக் குறிக்கும் என்பார்கள் நூலறிந்த மேலோர்.

ஆகவே—முத்து ராமலிங்கம் என்ற பெயரே வீரத்தையும் அமைதியையும் குறிக்கும் தத்துவப் பெயராக விளங்கியது.

அத்தகைய தேவர் இப்போது இல்லை. ஆனால் அவர் உருவாக்கிய வீர உணர்வு இன்றும் இருக்கிறது. அவர் இன்று கல்லறையில் அடங்கியிருக்கலாம். ஆனால் அவர் இலட்சியம் ஈடேறியிருக்கிறது!

இந்தக் கடற்கரையின் வெண்ணிற மணலுக்கு வாயிருந்தால்—தேவர் முழங்கிய முழக்கத்தை எடுத்துரைக்கும். மதுரையிலும்—தென் பாண்டி மண்டலத்திலும் அவர் புரிந்த கர்ஜனையை மரங்களும்—மதிற்சுவர்களும்—கடல் அலைகளும் இன்று கூட எதிரொலிக்கும்!

தேவர் அவர்கள் இஸ்லாமியத்தாயிடம்தான் பால் உண்டார் என்பதைக் கூறிய அப்துல் சமது அவர்கள் முஸ்லிம் சமுதாயத்திற்கும் முத்துராமலிங்கத்தேவருக்குமிருந்த பந்த—பாசத்தைப் பற்றி எடுத்துரைத்தார்.

அதுபோல் நான் பிறந்த சோழ மண்டலத்திற்கும் தேவருக்கும் இருக்கும் தொடர்பு பற்றிக் கூற விரும்புகிறேன்!

சோழமண்டலத்தின் சின்னம் புலி. பாண்டிய மண்டலத்தின் தேவர் தன் கட்சிக் கொடியிலுள்ள சின்னமாகத் தேர்ந்தெடுத்ததும் புலிதான். ஆகவே—எங்கள் சோழமண்டலத்துக்கும் அவருக்கும் இந்த வகையில் தொடர்பு உண்டு!

காங்கிரசை—விடுதலைப் போராட்டத்தில் வழி நடத்தியபோது தேவர் அவர்கள் எழுப்பிய சிங்க நாதம்—அவர் கிளப்பிய எக்காளம்—அவர் உயர்த்திய கைமுஷ்டி—அவர் முழங்கிய முழக்கம் இந்திய விடுதலை வரலாற்றில் வேறு யாரும் செய்ததில்லை என்று அறிந்தவர்கள் கூறுவர்!

தேவர் அவர்களால் உருவாக்கப்பட்ட காங்கிரஸ் தலைவர்கள் இன்று அவருக்குரிய மரியாதையைச் செலுத்துவதில்லை.

"என்ன கருணாநிதி! இப்படி பேசுகிறாய்? மரியாதை செய்வது இருக்கட்டும், அவரை வாழவாவது செய்தார்களா அவர்கள் ஆட்சியில்"— என்று நீங்கள் கேட்பது எனக்குப் புரிகிறது!

அது பெருமளவு உண்மைதான்! தேவர் அவர்கள் இயற்கையாக முடிவு எய்தவில்லை, இதய அதிர்ச்சி காரணமாகத்தான் இறந்தார்!

தனிப்பட்ட முறையில் அதிர்ச்சியடையும் இதயம் பெற்றவர் அல்ல அவர்!

— பொதுப்பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி.

# காஞ்சி

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாதம் ரூ. 5

மலர் 4 19—11—67 இதழ் 17


# பிரதமரின் வாழ்த்துச் செய்தி?

இந்தியத் துணைக்கண்டத்தின் வரி வருவாயில் பாதிக்கும்மேலாக, காஷ்மீரைப் பாதுகாப்பதற்கும் இமய எல்லையைப் பாதுகாப்பதற்கும் மட்டுமே, பாதுகாப்புச் செலவு என்பதன்பேரால், இந்திய அரசு செலவுசெய்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும், மத்திய அரசின் பட்ஜெட்டில், பாதுகாப்புச் செலவினம் விரிவடைந்து கொண்டு வருவதுவே இதனை மெய்ப்பிக்கப் போதுமான சான்ருகும்.

இந்திய அரசு, காஷ்மீர் மீதான இந்தியாவின் கொள்கை மாறவில்லை என்பதை, சமயம் கிடைக்கிற போதெல்லாம் வலியுறுத்திக்கொண்டும் வருகிறது.

இந்நிலையில், அண்மையில், ஜம்மு-காஷ்மீர் போர் நிறுத்தக் கோட்டுக்கு மேற்கே சுமார் 20-கல் தொலை வில் பாகிஸ்தான் அரசு, 'மங்களா' என்ற பெயரில் ஒரு அணையைக் கட்டி முடித்துள்ளது.

பாகிஸ்தான் கட்டி முடித்துள்ள இந்த அணைக்கு இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள், இந்தியா வின் சார்பாகத் தமது வாழ்த்தினை அனுப்பி வைத்திருக் கிருர்.

மங்களா அணை தொடர்பான பிரதமரின் வாழ்த் துச் செய்தி, இந்த கிழமை மத்தியில் மக்களவையில் எதிர்க் கட்சி உறுப்பினர்களால் பலத்தக் கண்டனத் துக்கு ஆளாகி இருக்கிறது.

பாகிஸ்தான் அரசுக்கு அவசர அவசியமாக அணை கள் கட்டிக்கொண்டு, தண்ணீருக்குப் பாதுகாப்புத் தேடிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம், இந்தியா — பாகிஸ்தான் ஆற்றுநீர்ப் பங்கீடு தொடர்பான ஒப்பந்தத் தின் மூலம் ஏற்பட்டிருக்கிறது. இதனுல், பாகிஸ்தான் அரசாங்கம்,அணைகள் கட்டிக்கொள்வதைத்தடுக்கவோ, மறுப்புக் கூறவோ எந்த அரசுக்கும் உரிமை இருக்க முடியாது.

ஆனுல், அவ்வாறு அணைகள் கட்டப்படுவது எங்கே? பாகிஸ்தானின் ஆதிபத்தியப் பகுதியின்மீதா? இல்லை. மாருக இந்தியாவும், பாகிஸ்தானும் உரிமை கொண்டாடிக் கொண்டிருக்கும் பகுதியில் கட்டி இருக் கிறது. தகராறுக்குரிய பிரதேசத்தில் கட்டி முடித்துள்ள ஒரு அணைக்குத்தான் இந்தியப் பிரதமர் தமது வாழ்த் தினை அனுப்பி இருக்கிருர் என்ருல் பிரதமரையும், 'இந்தி யாவின் கொள்கையில் மாற்றம் இல்லை' என்று அவர் கூறுவதன் உட்பொருளையும் நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை,

பாகிஸ்தான் வன்முறை ஆக்கிரமிப்பு மூலம் கைப் பற்றி வைத்துக் கொண்டுள்ள பகுதி அது. அங்கே அணை கட்டப்படுவது, அந்தப் பகுதியின் மீதான ஆதி பத்திய உரிமையை, உறுதிப்படுத்திக் கொள்ளும் ஒரு நடவடிக்கையாகும். வாழ்த்துச் செய்தியின் மூலம்— இந்தநடவடிக்கையை இந்தியப் பிரதமர் ஆதரிக்கிருரா?

மங்களா அணை கட்டப்பட்டுள்ள பகுதி தகராறுக் குரிய இடம் என்பதையும், அங்கு பாகிஸ்தான் அணை கட்டக்கூடாது என்பதையும் சுட்டிக்காட்டி முறையே 1957, 1958, 1959ல் ஐ. நா. பந்தோபஸ்துக் குழு வில், இந்தியா ஆட்சேபம் தெரிவித்திருக்கிறது.

1960-ல் 'சிந்துநதி' நீர்ப்பங்கீடு தொடர்பான ஒப்பந்தத்தில்கூட, இந்த பகுதிபற்றிய சிக்கல் குறிக்கப் பட்டுள்ளதாக பிரதமர், மக்களவை உறுப்பினர்களின் வினுக்களுக்குப் பதில் அளித்திருக்கிருர்.

அப்படி இருக்க, ஐ. நா.வில் ஆட்சேபணையையும் கிளப்பிவிட்டு, ஆட்சேபம் கிளப்பியுள்ள ஒரு அணைக்கு ஆட்சேபம் செய்துள்ள ஒரு அரசு, வாழ்த்துச் செய்தி அனுப்புகிறதென்ருல், இதில் ராஜதந்திர நடவடிக்கை இருப்பதாக எப்படி ஒப்புக்கொள்ள முடியும்?

பிரதமர் அவர்களது இந்த நடவடிக்கை, ஐ. நா. வில் கூறியுள்ள புகாரையும், இந்திய அரசுக்கு-அந்தப் பகுதியின்மீதான ஆதிபத்திய உரிமையையும் 'தவரு னது' என்று பாகிஸ்தான் ஆதாரத்திற்கு எடுத்துக் கொள்ளத் தேவையான ஒரு சான்று அல்லவா?

இந்திய நடவடிக்கை தவருனது என்று, இந்தி யாவே ஒப்புக்கொள்ளும் ஒருவித விபரீதமான நிலைமை யைத்தான் பிரதமரின் இந்த வாழ்த்துச்செய்தி தோற்று விக்கும்.

செய்வதனையும் செய்துவிட்டு, கண்டிக்க வந்த மக்களவை எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் கண்டிக்க வருகிருர் பிரதமர் என்கிற செய்தியைப் படிக்கிறபோது, பிரதமர் எந்தப் பக்கத்திலிருக்கிருர்? என்ற ஐயம் எழு கிறது. 1962ல் சீன நெருக்கடியின்போது வெளிவிவ கார அமைச்சராக இருந்த திரு. வி. கே. கிருஷ்ண மேனன்மீது எத்தகைய குற்றச்சாட்டு கூறப்பட்டது? அதேபோன்ற குற்றச்சாட்டை பிரதமர்மீது கூற முடி யாதா? பெருந்தன்மையோடு எதிர்க்கட்சி உறுப்பினர் கள் விட்டிருக்கிருர்களே!

செய்துவிட்ட தவறுகளைக் கண்டிக்கிறபோது, கண்டனத்துக்கு ஆளாவோர், தவறுகளை உணர்ந்த தாகக் காட்டிக்கொள்வதில்லை. அப்படிக் காட்டிக் கொள்வது, கௌரவக் குறைவானது என்றே நினைக் கின்றனர்.

இந்த நிலையும், நினைப்பும் மாறி, உண்மையான யதார்த்த நிலையை என்றைக்கு இந்திய அரசு பிரதி பலித்துக்காட்ட முன்வருகிறதோ, அன்றுதான் உள் நாட்டிலும்சரி, வெளிநாட்டிலும்சரி, முழுமையான பாராட்டுக்கு உரியதாக ஆகமுடியும்.

வெறும் வாயளவில், கொள்கையில் மாற்றமில்லை என்பதும் விட்டுக் கொடுக்கமாட்டோம் என்று வீரா வேசமாகப் பேசுவதும் மட்டும் பிரச்னைகளுக்கு உரிய தீர்வைக் கொண்டுவந்து சேர்த்துவிடாது. ஆக்கபூர்வ மான அறிவுபூர்வமான செயல் திட்டங்கள் தேவை. முறையான சிந்தனைகள் தேவை.

'மங்களா அணை' தொடர்பான பிரதமரின் வாழ்த் துச் செய்தி, இதனைப் பிரதிபலிப்பதாகத் தெரியவில்லை,

✽

# கல்விக் கொள்கை!

"தமிழக மக்கள் தாம் அறிந்துகொள்ள வேண்டியவை — புரிந்துகொள்ள வேண்டியவை அனைத்தையும் தங்கள் தாய் மொழியான தமிழிலேயே இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்; 'அப்படி எதிர்பார்ப்பது தவறு' என்று எவரும் கூறமாட்டார்கள்! அப்படித்தான் ஆங்கிலேய நாட்டிலுள்ள ஆங்கிலேயர்களும், ஜப்பான் நாட்டிலுள்ள இரஷ்யர்களும், இத்தாலிய நாட்டிலுள்ள இத்தாலியர்களும் தத்தம் மொழியிலேயே இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்!

'தமிழகத்துத் தமிழ்ப் பெருங்குடி மக்கள், தாங்களும் தங்கள் பிள்ளைகளும் பெறும் கல்வி அறிவு தமிழின் மூலமே கிடைக்கப்பெறவேண்டும் என்றும், தங்களின் பண்டமாற்று — நீதிமன்றம்— சட்டமன்றம்—ஆட்சித்துறை-அலுவலகம் ஆகிய அனைத்தும் தமிழிலேயே நடைபெற வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார்கள்! இந்த ஆவலை நிறைவேற்றுவது இன்றைய—வருங்காலக் கல்வியாளர்களின் நீங்காக் கடமையாகும்."

ஒரு நாடு எந்த அளவுக்குத் தன்னுடைய அறிவுத்திறனையும் — ஆற்றல்திறனையும் பயன்படுத்தி எல்லா வகையிலும், எல்லா வழியிலும் தன்னிறைவு பெற்று — இயன்றால், பிற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து வருவாய் பெற்று வாழ்கிறதோ, அந்த நாடுதான் சிறப்புற்றுத் திகழக் காண்கிறோம்.

நமது மாநில மக்களின் கல்வித் தேவையை நிறைவு செய்வதற்குத் தமிழும், ஆங்கிலமும், போதுமானவை; எந்தத் தனிப்பட்ட மொழிக்கும் தனிச் சலுகை காட்டக்கூடாது. ஒவ்வொரு மாநிலமும் தனது வட்டார மொழியின் வளர்ச்சிக்கு உதவி புரியவேண்டும்.

அத்துடன், மாநிலங்களிடையே தொடர்பு இருக்கவும், உயர்தரப் படிப்புக்கும் இன்றியமையாத ஆங்கிலத்தைச் சரிவரப் படிப்பதற்கு வழி செய்யவேண்டும்.

இந்தியா போன்ற பெரிய நாடுகளில் கல்வி முன்னேற்றத்திற்கு அரசின் முயற்சி மட்டும் போதாது; பணவசதி உள்ளவர்கள் தாராளமாக நன்கொடைகள் வழங்கவேண்டும்.

"இன்றைய நிலையில் அதாவது 1967-68-ஆம் ஆண்டில் தமிழக அரசு கல்வித் துறைக்கு மட்டும் ரூ 54 கோடி ஒதுக்கியிருக்கிறது.

ஊராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம், நகராட்சி மன்றம் போன்ற உள்ளாட்சி மன்றங்கள் ரூ. 4 கோடிக்குமேல் செலவு செய்கின்றன.

இதுதவிர, அறங்காப்பு நிலையங்கள் பலவும் அறம் புரியும் செல்வர்கள் பலரும் பல கோடி ரூபாய்களைப் பயன்படுத்துகிறார்கள்.

இவ்வளவு ஊக்கந் தந்தும், தமிழகம், கல்வியின் முழுப் பயனையும் பெற முடியவில்லை! கல்வியின் பயனைப் பெறாதவர்கள் இன்னமும் பெருவாரியினராகவே இருந்து வருகின்றனர்! இன்னமும் நூற்றுக்கு 62 பேர்களுக்கு எழுதப் படிக்கத் தெரியாது.

உலகில் எந்த மூலையில்—எந்த முடுக்கில் என்ன நிகழ்ச்சி நடைபெற்றாலும் உடனே உலகுக்கு அறிவிக்கும் மொழி ஆங்கிலமேயாகும்!

உலகில் எந்த நாட்டில்—எந்த அறிவியல் எந்தக் கண்டுபிடிப்பைக் கண்டுபிடித்தாலும், அடுத்த நொடியிலேயே உலகத்திற்கு அறிவிக்கும் மொழி ஆங்கிலமே ஆகும்!

உலகில் எந்த நாட்டில்—எந்த மொழியில் சிறந்த இலக்கியங்கள், அறிவியல் நூல்கள், கலையியல் நூல்கள் இருந்தாலும் — தோன்றினாலும் அவற்றையெல்லாம் உடனுக்குடன் மொழி பெயர்த்து உலக முழுமைக்கும் அறிவிக்கும் மொழி ஆங்கிலமே ஆகும்!

நம் தாய்மொழியான தமிழ், எல்லாத் துறையையும் பற்றிய அறிவையும் பெற்று அவற்றையெல்லாம் விளக்கிக் காட்டும் ஆற்றலோடு விளங்க வேண்டுமாயின், அதற்கு ஆங்கிலம்தான் உறுதுணை புரியக்கூடிய மொழியாகும்!

தமிழகக் கல்வி முறையில் முதல் வகுப்பிலிருந்து தாய் மொழியும் வட்டார மொழியுமான தமிழையும், மூன்றாவது வகுப்பிலிருந்து உலகப் பொதுமொழியும் தொடர்பு மொழியுமான ஆங்கிலத்தையும் ஒவ்வொருவரும் கட்டாயம் பயில வேண்டுமென்ற ஏற்பாடு வற்புறுத்தப்பட்டு வருகிறது.

தமிழ் மொழியில் சிறப்புப் பயிற்சி பெற விரும்புவோருக்கும், பிற மொழிப் பயிற்சி பெற விரும்புவோருக்கும் வாய்ப்பு ஏற்படுத்தித் தரும் நோக்கத்தோடு 9 10 11-ம் வகுப்புகளில் சிறப்புத் தமிழையோ அல்லது கன்னடம், மலையாளம், தெலுங்கு, உருது, சம்ஸ்கிருதம், இந்தி போன்ற மொழிகளில் ஒன்றையோ விருப்பப் பாடமாகப் படிக்கலாம் என்ற முறை வகுக்கப்பட்டிருக்கிறது.

தமிழகத்தில் தமிழ் அல்லாத 13 மொழிகளுக்குத் தேவையான வாய்ப்பு உயர்நிலைப் பள்ளிகளில் ஏற்படுத்தித் தரப்பட்டிருக்கிறது.

தமிழகத்தின் உயர்நிலைப் பள்ளிக் கல்வி முறையில் தமிழ் ஆங்கிலம் இரண்டையும் கட்டாய மொழியாகவும், மூன்றாவது ஒரு மொழியை விருப்ப மொழியாகவும் பயிலுவதற்கேற்ற வகையில் மூன்று மொழிகளுக்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தமிழ், ஆங்கிலம் இரண்டை மட்டுமே கற்றுக் கொள்ள விரும்புவோர்களுக்கு வாய்ப்புத் தரப்பட்டிருக்கிறது.

கல்லூரிப் படிப்பில் தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளும் இப்பொழுது இடம் பெற்றிருக்கின்றன.

கல்லூரிகளில் படிப்படியாகத் தமிழ் மொழியில் பாடப் பயிற்சியளிக்கும் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

தமிழ் மாநிலத்தில் ஆங்கிலத்தின் இடத்தை எல்லா வகையிலும் பெற்றுக்கொள்ளும் முழு உரிமை தமிழ் மொழிக்குத்தான் உண்டே அல்லாமல் இந்தி மொழிக்கு எள்ளளவும் இல்லை!

சுருங்கச் சொன்னால் தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு மாணவரும் மாணவியரும் தமிழ் — ஆங்கிலம் இரண்டு மொழிப் பயிற்சியிலும் வல்லவர்களாகவே இருக்க வேண்டும்; தனிப்பட்டவர்கள் தத்தம் விருப்பத்திற்கிணங்க வேறு எத்தனை மொழிகளை வேண்டுமானாலும் படித்துக்கொள்ளலாம் என்பதுதான் மொழியைப் பொறுத்தவரை கடைப்பிடிக்கக்கூடிய கொள்கையாகும்."

—கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன்.

# டெல்லி சுல்தான்கள்!

"டெல்லி டெல்லி. டெல்லி! எதற்கெடுத்தாலும் டெல்லியா? உன்னால் முடிந்தால் செய். முடியாவிட்டால் கையை விரித்துக் காட்டி விட்டு ஓடு! ஏன் டெல்லி டெல்லி என்று பழியைத் தூக்கி அவன் தலையில் போடுகிறாய்?"—என்று அகில இந்திய காங்கிரஸ் தலைவர் ஆவேசமாகக் கேட்கிறார் நம்மை நோக்கி!

அவரது கருத்திலிருக்கும் உண்மையைக் காட்டிலும், அவரது ஆவேசத்திலிருக்கும் அர்த்தம் நமக்குப் புரிகிறது! பருப்பு விலையைக் காட்டி, புளி விலையைக் காட்டி, சர்க்கரைப் பற்றாக்குறையைக் காட்டி விலைவாசி ஏற்றத்தைக் காட்டி, பதவியிலிருக்கும் தி. மு. கழகத்தைப் பதவியிலிருந்து விரட்டி விடலாம் என்று மனப்பால் குடிக்கும் அவர் ஆவேசம்கொள்ளாமல் வேறு என்ன செய்வார்?

முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் டெல்லி பீடத்தை நோக்கி ஏதோ கையைக் காட்டுகிறாரே—அதில் எவ்வளவுதூரம் உண்மை இருக்கிறது? அது ஏற்புடையது தானா? இதுவரை யாரும் சொல்லாததுதானா?...இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு புதிதாக ஒரு குரல்—இப்படிக் கேட்கிறதே, இதைப் பொய்க் குரல் என்று ஒதுக்கிவிடுவது அறிவுடைமையாகுமா என்பதை பெல்லாம்—பாவம். காமராசர், ஏன் எண்ணிப் பார்க்க மறுக்கிறார்! பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறுவதுபோல அவர்தான் இருந்ததை இழந்தவராயிற்றே — இருக்காதா கோபம்? வேர்க்காதா முகம்? சிவக்காதா கண்கள்? துடிக்காதா மீசை?

மாநில வளர்ச்சிக்கான முழு அதிகாரம் நம்மிடமில்லை!

அதிகாரம் டெல்லியிடம் குவிந்திருக்கிறது. மாநிலங்களின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையான திட்டங்களை டெல்லி தீட்டுகிறது.

விலைவாசியை மேலே மேலே ஏற்றிக் கொண்டிருக்கும் பொருளாதாரச் சக்கரங்கள் டெல்லியின் கையிலே இருக்கின்றன. என்பதுதான் நமது முதலமைச்சர் அறிஞர் அண்ணாவின் வாதம்.

மக்களின் பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக்கொண்டு ஓடுவதற்கோ, அல்லது டெல்லியைக் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்திவைக்க வேண்டுமென்ற ஆசையிலோ இந்த வாதம் எழுப்பப்படுகிறதா? அறிஞர்அண்ணா அவர்களின் இந்த குரல்தான் இந்திய அரசியல் வரலாற்றிலேயே, டெல்லியின் அதிகாரக் குவிப்பு பற்றி முதன்முறையாக எழுப்பப்படும் முதல் குரலா?—

சட்டம் பயின்ற மேதைகள்

பொருளாதார விற்பன்னர்கள்

அரசியல் தலைவர்கள்

நிருவாகத் துறை அறிஞர்கள்

ஆகிய பலரும் டெல்லியிடம் சிக்கிக் கிடக்கும் அதிகாரங்கள் பற்றி அவ்வப்போது கண்டனம் தெரிவித்திருக்கின்றனர்.

உரிமை வேண்டி ஓங்கி ஒலிக்கும் அழுத்தமான முதல் குரல் என்று அண்ணாவின் குரலைக் கூறலாமே ஒழிய—காங்கிரசார் கூறுவதுபோல முதல் குரலல்ல!

வி. பி. மேனன் என்னும் மூதறிஞர் —கேரளம் தந்த நிருவாகத் துறை நிபுணர்—பல்வேறு துண்டுகளாகச் சிதறிக் கிடந்த பாகங்களையெல்லாம் ஒன்றுபடுத்தி இந்தியா என்ற ஒரு அமைப்பை உருவாக்கிய சர்தார் வல்லபாய் படேலுக்குப் பேருதவி புரிந்த பெரியார் — படேலின் கண்காணிப்பில் இயங்கிய மாநில அரசுகளின் அமைச்சகத்தில் முதலில் அதன் செயலாளராகவும், பிறகு அதன் ஆலோசகராகவும் பணியாற்றிய பெருமை பெற்றவர் — இந்தியாவின் வரை படத்தை மாற்றி எழுதியவர் என்று சிறப்பித்துக் கூறப்படும் சீராளர் —மத்திய—மாநில அரசுகளின் அதிகாரங்கள் பற்றியும் அதில் நிறைந்துள்ள குறைபாடுகள் பற்றியும் கூறி இருப்பதை 'ஆவேசக்காரர்கள்' அறிய வேண்டும்!

1962-ம் ஆண்டு "சுயராஜ்யா" மலரில் திட்டக் கமிஷனும், மாநில சுய ஆட்சியும்" என்ற தலைப்பில் திரு. வி. பி. மேனன் எழுதிய கட்டுரையின் சில பகுதிகளைப் பார்ப்போம்:

'சமீபத்தில் மேற்கு வங்க அரசு ஒரு பெரும் பரபரப்பை உருவாக்கி இருக்கிறது. தனது மாநிலத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்காக நிதி உதவி வேண்டி, வெளிநாடு ஒன்றோடு நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தி இருக்கிறது.

இந்த நிலைமை ஒன்றிரண்டு மாநிலங்களுக்கு ஏற்படுவதும், பேச்சுவார்த்தைகளில் இறங்குமளவுக்குத் துணிச்சலோடு செயல்படுவதும் எதன் அறிகுறி என்று உற்றுப் பார்ப்போமேயானால் — மத்திய அரசின் கொள்கைகளில் மாநில அரசுகள் பரவலாகக் கொண்டிருக்கும் அதிருப்தியின் அறிகுறியே என்பதைத் தெளிவாக உணரலாம்!"

* * *

"மொகலாய சக்ரவர்த்திகள் ஐக்கிய அமைப்பு என்பதையே அறியாதவர்கள். அவர்கள் ஆண்டதெல்லாம். டெல்லித் தலைநகர் என்ற இராணுவ அதிகாரபீடத்திலிருந்து அவர்களுக்கு அடிவருடிய ஏஜண்டுகள் மூலம் 'சுபாக்கள்' என்ற பல்வேறு நிலப் பிரிவுகளைத்தான்.

இந்த சுபாக்களின் வளர்ச்சியில் டெல்லி மொகலாயர்கள் சிறிதும் அக்கறை காட்டமாட்டார்கள்.

அதே அமைப்பைத்தான் வெள்ளைக்காரனும் நிறுவினான். அதிக அதிகாரங்களைக் கொண்ட ஒரு மத்திய அமைப்பை நிறுவி அதன்கீழ் மாநிலங்களைத் தனதுஏஜண்டுகளின் மூலம் ஆண்டு வந்தான்.

அதன் பிறகு 1947 முதல் இன்று வரை பல அரசியல் நிபுணர்கள்— டெல்லியின் அதிக அதிகாரத்தை எதிர்த்தும் மாநில சுய ஆட்சி கோரியும் உரிமை எழுப்பி வருகிறார்கள்.

இதன் விளைவுதான் வங்கஅரசின் போர்க்கோலம்.

அடிமைப் பட்டுக்கிடந்த அன்றைய சுபாக்களைப்போலல்லாமல்

இன்று ஒவ்வொரு மாநில அரசாங்கமும் பொருளாதார முன்னேற்றத்தை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றன.

பொருளாதார முன்னேற்றம் மாநிலங்களின் நிதி அமைப்பைப் பொருத்திருக்கிறது.

ஆனால் மாநிலங்களின் நிதி அமைப்பில் மேலாதிக்கம் செலுத்தும் அதிகாரம் டெல்லியிடம் இருப்பதால் — மாநிலங்கள் பலஹீனமடைகின்றன.

* * *

மாநிலங்களில் உள்ள காங்கிரஸ் தலைவர்களின் கதி வேடிக்கையானது. எதற்கெடுத்தாலும் டெல்லிக்கு ஓடுவதும் அவர்களது ஆலோசனையைக் கேட்பதும்தான் இவர்களது வேலை.

'இது உங்கள் அதிகாரம் — நீங்களே தீர்மானித்துக்கொள்ளுங்கள்' என்று டெல்லி இவர்களிடம் விட்டிருப்பதைக்கூட இவர்கள் தீர்மானிப்பதில்லை. இதனால் மாநிலத் தலைமையும், மாநில அரசியலும் பெருவிபத்துக்குள்ளாகி, மெலிந்து, டெல்லியின் கீழ் சிற்றெறும்பாகக் கிடக்கிறது.

தனது தேவைகளைத் தான் மட்டுமே அறியும் வாய்ப்புள்ள மாநிலங்கள்—தங்களுக்கான பொருளாதாரத் திட்டங்களையும் தாங்களே தீட்டிக் கொள்ளவேண்டும். ஆனால் இன்றைய நிலைமை என்ன?

மாநில அரசைக் கூட்டி ஆலோசிக்கிறார்கள். திட்டம் தீட்டுங்கள் என்கிறார்கள் — அவ்வளவுதான்! இறுதி முடிவு எடுப்பதும், இதைச் செய், அது வேண்டாம் என்று ஏவவிடுவதும், திட்டத்திற்கான நிதி அளிப்பதும் மத்திய அரசுதான்!

தங்களின் தேவைகளைக் கேட்டுக்கொண்டிருக்கும் வெறும் மனுதாரர்களைப் போலத்தான் மாநிலங்களின் இன்றைய நிலைமை இருக்கிறது!

திட்டங்களின் நன்மை தீமைபற்றியும், திட்டங்களால் பெறும் பலனைப் பற்றியும், மக்களின் எண்ணம் எப்படி இருக்கிறது - திட்டத்தை எதிர்க்கிறார்களா? வரவேற்கிறார்களா? என்பது பற்றியும், திட்டம் பலனைத் தந்ததா? இல்லை திட்டச் செலவால் பணவீக்கம் ஏற்பட்டு விலைவாசிகள் உயர்ந்தனவா என்பது பற்றியும் அந்தந்த மாநில அரசு மட்டுமே அறிய முடியும்!

மாநில சுய ஆட்சி என்பதில் உண்மை இருக்குமானால், தங்களுக்கான நிதித்தேவையைத் தாங்களே நிறைவேற்றிக்கொள்ளும் வசதியை மாநிலங்களே பெறவேண்டும்.

இந்த கண்ணோட்டத்தில் பொருளாதார அமைப்பும், வரி விதிப்புக் கொள்கைகளும் மாற்றியமைக்கப்படவேண்டும்.

இந்திய அரசியல் சட்டம் உருவாக்கப்பட்ட நேரத்தில் இம்மாதிரியானப் பிரச்சினைகளில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை!

போதும் போதும் என்று சொல்லத்தக்க வகையில் புட்டுப் புட்டு வைக்கிறார் திரு. வி. பி மேனன், நிறைந்திருக்கும் குறைபாடுகளை!

மாநிலங்களுக்குப் போதிய அதிகாரமில்லை என்கிறாரே! — அவர் ஒரு தி. மு. காவா?

திட்டமிடுவதற்கான உரிமை இல்லை என்கிறாரே?—அவர் என்ன வீண்பழி கூறும் ஒரு மனிதரா?

திட்டங்களை மேற்கொள்வதற்கான நிதி வசதி மாநிலங்களுக்கு இல்லை என்கிறாரே!—அவர் என்ன 'பிரிவினை மயக்கத்தில்' கூறுகிறாரா?

டெல்லியின் திட்டங்களால் பணவீக்கம் ஏற்பட்டு விலைவாசிகள் உயர்வதை அறிந்தும் அதைத் தடுக்கும் அதிகாரம் மாநிலங்களுக்கு இல்லை என்கிறாரே!—அவர் என்ன பித்தலாட்டக்காரரா? விலைவாசிகளைக் குறைப்பேன் என்று கூறி ஓட்டுக் கேட்டவரா? காங்கிரசாட்சி ஒழிய வேண்டும் என்று கணக்குப் போட்டுக் கதைப்பவரா?

அல்ல; சுதந்திரத்துக்குப் பின் அமைந்த புதிய இந்தியாவில் காங்கிரஸ் தலைவர்களுக்குத் துணைக்கரமாக அமைந்தவர்; பட்டேலின் பாராட்டைப் பெற்றவர்!

இந்திய அரசியலமைப்பு இன்னும் மொகலாயச் சக்ரவர்த்திகள் கண்ட அமைப்பு போலவும், பிரிட்டிஷார் அடைந்த ஆதிக்க அமைப்பு போலவும்தான் இருக்கிறது—அரசியல் சட்டத்தில் மாற்றம் தேவை, வரி விதிப்பில் மாற்றம் தேவை என்கிறாரே மேனன்—அவர் சொல்லுவதை யாவது ஏற்றுக்கொள்வார்களா காங்கிரசார்?

இதோ இன்னொருவர் கருத்து!...

சர் சி. பி. இராமசாமி அய்யர் அவர்களாலும், ஜி. வி. மாவ்லங்கர் அவர்களாலும் உயர்வாகப் பாராட்டப்பட்ட "இந்திய அரசியல் சட்ட அமைப்பு பற்றி—ஒரு பரிசீலனை" என்ற புத்தகத்தில் திரு. பி. ராஜேஸ்வர ராவ் என்னும் சட்ட மேதை கூறுகிறார்—

"மௌரியர்களும், குப்தர்களும், மொகலாயர்களும் இந்தியாவின் அரசியல் சக்கரத்தை ஒரு அதிகாரக் குவிப்புள்ள இடத்திலிருந்துதான் சுழற்றிக்கொண்டிருந்தார்கள். அதேபோன்ற ஒரு பலம்மிக்க அமைப்பாகத்தான் மத்திய அரசாங்கம் இருக்கிறது.

"ஆனால் சுதந்திரம் பெற்றபிறகு இப்படி ஒரு அமைப்பு இருக்கக் கூடாது என்ற கண்ணோட்டம் எழுந்தது. தங்களைத் தாங்களே ஆண்டுகொள்ளும் மாநில அரசுகள் அமைக்கப்படவேண்டும் என்ற எண்ணம் பிறந்தது. ஆனால் அந்த எண்ணம் — செயலளவில் முழுமையாகப் பிரதிபலித்துவிட்டது என்று கூற முடியாது!

"97-பிரிவுகளைக்கொண்ட விரிந்த பரந்த அதிகார எல்லை மத்திய அரசுக்கும், 66-பிரிவுகளைக்கொண்ட குறுகிய அதிகார எல்லை மாநில அரசுக்கும் வகுக்கப்பட்டுள்ளன. இரண்டுக்கும் பொதுவான அதிகாரங்களாக 47-பிரிவுகள் உள்ளன. என்றாலும், மத்திய—மாநில அரசினரின் அதிகார உரிமைபற்றிய சர்ச்சைகளில் அரசியல் சட்டம் வகுத்தவர்கள் வென்றார்களா தோற்றார்களா என்பதைக் காலம்தான் தீர்ப்பளித்துச் சொல்லவேண்டும்!"

ஆம்: அன்று திரு. பட்டாபிசீதாராமயாவால் பாராட்டப்பட்ட இந்த வார்த்தைகள் வென்றுவிட்டன; காலம் தீர்ப்பளித்துவிட்டது. புதிய கண்ணோட்டம் தேவை என்று!

டெல்லியின் பிடியில் எல்லா அதிகாரங்களும் சிக்கிக்கிடப்பதற்குக் காரணம்—மொகலாய, பிரிட்டானிய அரசினரின் சர்வாதிகார சட்ட அமைப்பின் வழிமுறையே என்பதைத் தெளிவாக விளக்கிடும்போது, ஒரு ஜனநாயகவாதியின் நெஞ்சம் கூசாமல் எப்படி இருக்கும்?

ஜனநாயகம் என்பது மக்களை மக்களே ஆளுவதுதான் என்று விளக்கம் கூறப்பட்டு, அதனால் மக்கள் மகோன்னதப் பெருமையில் திளைத்துக்கொண்டிருக்கும்போது - ஆளுவதற்காக வகுக்கப்பட்டிருக்கும் சட்டங்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் உட்கார்ந்துகொண்டிருப்பவர்

(12-ம் பக்கம் பார்க்க)

# பெண் குழந்தை வேண்டாம்!

திருவாரூர் முத்துராமன்

( சென்ற இதழ்த் தொடர்ச்சி )

கடலை நோக்கி அல்லி ஓடியதும்; பிரமித்து நின்ற ஜெகதீசன், அவளது அலறல் ஒலிகேட்டு அந்த திக்கை நோக்கி ஓடினான். அது போன்ற காட்சிகள் பலப்பலவற்றைப் பார்த்துப் பார்த்து ஆத்திரத்தின் உச்சியிலே இருந்து ஆர்த்துக் கொண்டிருந்த கடலின் கரங்கள், ஜெகதீசன் அங்கு வந்து சேருவதற்குள் அல்லியைத் தன் பயங்கர வயிற்றுக்குள் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டது!

இலட்சியவாதியாயிற்றே ஜெகதீசன்! அங்கே நின்று சிந்தித்துக் கொண்டிருக்கவில்லை. முடிவு இப்படித்தான் ஆகி இருக்கும் என்பதை யூகித்துக்கொண்டபடியே மெள்ள நடக்கத் தொடங்கினான்! நாளைய காலை இதழ்களில் பரப்பான தலைப்புக்களோடு அவளைப்பற்றிய எஞ்சிய செய்திகளைத் தெரிந்துகொள்ள முடியும்! நிச்சயம் அந்தச் செய்திகளில் அவளை இந்த நிலைக்குக் கொண்டுவந்த சுந்தரைப்பற்றியோ, தன்னைப் ற்றியோ எதுவும் இருக்கப் போவதில்லை! இந்த எண்ணத் தோடேயே நடந்துகொண்டிருந்தான்.

கடற்கரைச் சாலையின் பரபரப்புக் கூட பெருமளவு அடங்கிவிட்டிருந்தது. ஒரு உயிர் ஆழ்கடலில் அமிழ்ந்துவிட்டதுபற்றியோ அந்த உயிருக்குச்சொந்தமான உடலோடு தான்கொண்டிருந்த உறவுபற்றியோ கூட அப்போது அவனுக்குக் கவலை இல்லை. அன்றைய அவன் இலட்சியம் வீணாகக்கூடாது! அந்தஇரவை அவ்வளவு ஏமாற்றத்தோடு கழித்துவிட அவன் தயாராயில்லை!

அடுத்த 'இலட்சியம்'பற்றி எண்ணம் அசைபோடத்தொடங்கியது. கால்கள் நடந்துகொண்டே இருந்தன.

நினைவிற்குவந்த கல்லூரித் தோழிகள் பெயர்களை யெல்லாம் வரிசைபடுத்திப் பார்த்தான். அலுவலகத்தில் பணியாற்றும் தோழிகளது இல்லங்களின் முகவரிகளைப்பற்றியும் யோசித்துப் பார்த்தான்!

காந்திசிலையைக் கடந்து, எலியட்ஸ் சாலையில் கால்கள் பாவத் தொடங்கின. சட்டென்று 'மேரிஸ்கல்லூரி'யின்நினைவுவந்தது. அவ்வளவுதான். கால்கள் துரித நடையிடத் தொடங்கின.

காட்சிகளின் கற்பனையும் விரியத் தொடங்கியது. மியூசிக் அகாடெமி கட்டிடத்தையும் தாண்டிவிட்டான் அவன். கல்லூரித் தோழி காவேரியுடன் கைகோர்த்துக்கொண்டு, அந்த விடுதித் திடலில் நடைபயில்வதுபோன்ற பிரமை!

பதினோரு மணிக்கு மேலாகிவிட்டது. கல்லூரி விடுதியின் பக்கவாட்டில்மெல்லவிசிலடித்துக்கொண்டே அங்குமிங்கும் நடந்துகொண்டிருந்தான்! அவளது இருக்கையைத் தேடிச் செல்லும் முதல் அனுபவம் அது. அறை எண் கூடச் சரியாகத் தெரியவில்லை!

பெண்கள் விடுதி! நள்ளிரவு நேரம்!! என்பதுகூட அவனுக்கு நினைவிலில்லாமல் அல்ல — நினைத்துப் பார்க்கமுடியாதநிலை. வெறியின் உச்சிக்கே போய்க்கொண்டிருந்தான்!

முள்வேலியை எப்படித்தாண்டுவது? என்ற ஆராய்ச்சியிலீடுபட்டிக்கொண்டிருந்த சமயம்! 'பட்பட்' என்ற ஒலியோடு அவனைக்கடந்து சென்ற மோட்டார் சைக்கிளின் பின்புறம் அவள் அமர்ந்திருந்தது, இருளில் அவனுக்குத் தெரியவில்லை. தெருமுனையில் அது நிறுத்தப்பட்டதும், அதிலிருந்து காவேரி அதில் அமர்ந்திருந்தவனுக்கு 'டாடா' கொடுத்ததும் அருகே இருந்த அவனுக்குத் துல்லியமாகத் தெரியும்படி தெருமுனை விளக்கு உதவிசெய்தது!

அதோ! காவேரி வருகிறாள்! தான் இருக்கும் இடத்துக்கே வருகிறாள்! மோட்டார் சைக்கிள் புறப்படுகிறது. காவேரி வந்துவிட்டாள்! போனவன் யார்? ஒரே இரவில்தான் தேடிச்சொல்வோர் அத்துணைப் பேரும் இப்படியா?

எண்ணமுடிந்தது இப்போது! மரம் ஒன்றின் மறைவில் மறைந்து கொண்டான்! அதே மறைவை, அடுத்த வேலியின் கம்பியை லாவகமாக விலக்கிக்கொண்டு காவேரி உள்ளே புகுகிறாள்!

ஜெகதீசனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

'காவேரி"—என்றான் மெள்ள. குரலில் கடுமை இருக்கத்தான் செய்தது.

எதிர்பாராத இந்தக் குரலைக் கேட்டு காவேரியே அதிர்ந்து போனாள். உள்ளே புகுந்தவள் வேலிக்கு அப்பாலேயே நின்று கொண்டு 'யாரது?' என்ற யாழ் குரலைக் கிளப்பினாள்.

"நான்தான் ஜெகதீசன்..."

'ஓ! மை ஹார்ட்... யூ ஆர்...

'ஆமாம்! நான் தான்! நீயுமா இப்படி?"

"நீயுமாஎன்றால்? வேறெயாரையாவது இங்கேஎதிர்பார்த்திங்களோ?" கேலிதொனித்தது அந்தக் குரலில்! 'எக்ஸ்கியூஸ்மி' தூக்கம் வருது; போகட்டுமா?" என்றாள்.

என்ன பேசுவது என்றே புரியவில்லை. ஒரு இரவில் தன் இலட்சியங்கள் இப்படிச் சிதைந்து சின்னாபின்னமாவதைத் தன்னால் நம்ப முடியவில்லை. அவளது கேள்விக்கு பதில் சொல்லாமலேயே நடக்கத் தொடங்கினான்!

ஜெமினியைக் கடந்து கோடம்பாக்கம் சாலையில் நடந்தான்; 'அங்காவது' போகலாம் என்று! உடல் 'அந்த'த்தீயால்எரிந்துகொண்டிருந்தது! இலட்சியவாதி அல்லவா, எரியத்தானே செய்யும்? அனுபவரீதியாக எதையும் தெரிந்து தெளியும் அவனுக்கு அங்கே, சுவையான இன்னொரு அனுபவம் காத்திருந்தது.

வெகுதூரம் நடந்துவிட்ட சோர்வு! பசிவேறு! ஆமாம், உயிருக்கும் — உணர்வுக்கும் நல்ல பசி! அருகே, தேனீர் விடுதியொன்று. பலபேர் அமர்ந்து தேநீர் குடித்துக் கொண்டிருந்தனர். கடையை மூடுவதற்கான ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்தன. கடைக்காரன் மனைவி, அடுப்பு வேலைகளைத் துரிதமாக முடித்துக்கொண்டிருந்தாள். கரிய, தடித்த அவள் கணவன் அருகே அமர்ந்து தேனீர் பருகிக் கொண்டிருந்தான். விகாரமான முகம் — பருமனான உடல்கட்டு, அவன் ஒரு 'வஸ்தாது' என்பதை சொல்லாமல் சொல்லிக்கொண்டிருந்தது.

ஜெகதீசன் அங்குவந்து நின்றான். வாசலில் நின்றபடியே தேனீர் கேட்டுப் பெற்றுப் பருகிக்கொண்டிருந்தான். அப்போதுதான், அவன் பெண்ணுலகையே வெறுத்து ஒதுக்கும் அளவுக்கு மனம் மாறத்தக்க அந்த சம்பவம் நிகழ்ந்தது!

தேனீர் பருகிக்கொண்டிருந்த அவனைக் கடந்து அவள்—அவள்தான் அந்த சக்கு—சென்றாள். இடுப்பில் தண்ணீர்க் குடம்! காலை வியாபாரத்துக்கு வேண்டிய முதலீடு!! வேலைகளை யெல்லாம் முடித்துவைக்குட் ஒரு அறிகுறி அது!

கடைக்குச் சற்றுத் தள்ளி குழாயடியில் தண்ணீர்ப் பிடித்துக் கொண்டுதான் அவள், அவனைக் கடந்து சென்றாள் கடைக்குள்.

உயிரும் உணர்வும் ஒருமித்துப் 'பசி'க் களைப்பில் இருந்த அவனுக்கு அவளது முன்னழகைக் கண்டு ரசிக்கும் வாய்ப்புக் கிடைக்காமற் போயிற்று. காரணம் முன்கூட்டியே அந்தக் காட்சியை அவன் எதிர்பார்க்கவில்லை!



கடந்து சென்ற அவளது பின்னழகைக் கண்டு அதிர்ந்தான். நாகரிகமாய் உடுத்திய எளிய உடை! நர்ஸ் உடையில் தலையில் குட்டை கட்டிக்கொண்டு சலவைக் கஞ்சி ஆடையில் 'சரக் சரக்'க அவள் அழகு நடையிட்டு நடந்து சென்ற வேளையில் அவன். அவளைத் தொடர்ந்து எத்தனையோ முறை நடைபயின்றிருக்கிறான்.

"அவளா இவள்? அந்த சக்குக் குட்டியா இவள்? தன் வலையில் சிக்காமல் வழுக்கி வழுக்கி ஓடிய மீன் குஞ்சா இது?"

தேனீரைப் பருகியபடியே அவளைப்பற்றிய ஆராய்ச்சியிலீடுபட்டான். அதற்குள் அவள் அடுத்த குடம் தண்ணீருக்காகத் திரும்பி வந்து கொண்டிருந்தாள். "ஆமாம்! அவளேதான்! அவள் ஏன் இங்கு?" தொடர்பற்ற சிந்தனைகள் அவனைத் தொலைக்கத் தொடங்கின. ஜெகதீசனைக் கடந்து, அவள் குழாயடிக்குப் போய்விட்டாள்.

ஜெகதீசன் லாவகமாக தேனீருக்குரிய காசை, மேஜைமீது விட்டெறிந்துவிட்டு அவளைத் தொடர்ந்தான்.

"ஹலோ திஸ்திங்! நீயா! ஐ'யேம் ஒண்டர்..." — என்றான் கோணிக் கோணி நின்றபடி. அப்போது அவன் கண்முன் கடற்கரைக் காட்சியோ, மேரிஸ் கல்லூரிக் காட்சியோ படமாகக் கூடத் தெரியவில்லை. சக்கு, நர்ஸ் உடையில் நாகரிகத் தோற்றத்தோடு ஒயிலாக நடந்து செல்லும் காட்சிதான் உருவாகிக் கொண்டிருந்தது.

'ஓ நீங்களா! இங்கே கூட வந்திட்டிங்களா? இதுதான்எங்க வீடு, கடை, ஆஸ்தி பாஸ்தி எல்லாம்..."

என்றாள் நறுக்காக!

"சரிதான்! டீ கடைக் கிராக்கியா! சக்கு! இருந்திருந்து நீங்க ஒரு டீ கடையா வைக்கிறது! கேவலம்!"

அவன் அந்தத் தொழிலையே சலித்துக் கொண்டான்! சலித்துக்கொண்டான் என்றுகூட சொல்லமுடியாது. வெறுத்துக்கொண்டான்! பஞ்சமா பாதகம் செய்கிற ஒரு தொழில் என்ற எண்ணமோ என்னவோ!

"தொழில் எதுவா இருந்தால் என்ன! தொழில் செய்யிறதிலே என்ன கேவலம் இருக்கு? ஒவ்வொருத்தர் உடம்பையே வித்துப் பொழைக்கலியா? அதைவிட இது கேவலமா?"

குடத்தில் நீர் நிரம்பிவிட்டது. தூக்கி இடுப்பில் வைக்க ஆயத்தம் செய்தாள்!

"இரு இரு சக்கு! போகலாம்! எவ்வளவு நாளாச்சு உன்னைப் பார்த்து...டீயர் திஸ்திங்! வந்து, வந்து..."

அவன் முடிக்க முடியாமல் திணறியதை அவளே முடித்தாள்:

"வந்தாவது போயாவது! வாய் ஒண்ணும் நீளவேணும்! எங்க அப்பாவுக்குத் தெரிஞ்சா, உங்க உடம்பு அவ்வளவுதான்!"

அவள் சொல்லி முடிக்கவில்லை. படபடவென்று நாலைந்து அறைகள்! சட்டென்று தூரப்போய் விழுந்தான் ஜெகதீசன்! சக்குவின் தந்தை. அவனை அறைந்தது போதாதென்று, எட்டியும் உதைத்தார். கீழே விழுந்தவனைத் தூக்கி வைத்து...

எழுதத் தெரியவில்லை. படாத பாடு படுத்தப்பட்டுவிட்டான்! வெறி தணிந்தது! இலட்சியம் தெரிந்தது! அனுபவம் புரிந்தது அவனுக்கு!!

நிதானம் வந்தபோது எதிரே யாருமில்லை, சக்குவைக் காணோம்! அடித்த அந்த தடியனைக் காணோம்! தடுமாறிக்கொண்டே எழுந்தான்! தள்ளாடிக்கொண்டே நடந்தான்!

அடித்தவன் யார் என்பதோ, தான் காசை வீசிவிட்டுப் பெண்ணைப் பின்தொடர்ந்ததும் சந்தேகப்பட்டு, அவனைத் தொடர்ந்து வந்து மறைவாக நின்றுகொண்டு தான் வரம்பு கடக்கத் தொடங்கியதும் தன் வாயடக்கத் தொடங்கியது சக்குவின் தந்தைதான் என்பதோ அவனுக்குத் தெரியாமலே போயிற்று.

ஆட்களைத் திரட்டிக் கொண்டு வந்து அவனை அடிக்கலாமா? இதற்காகக் கல்லூரியை திரட்டி 'வேலை

நிறுத்தம்' (படிப்பு நிறுத்தம்தான்!) செய்யலாமா? என்றெல்லாம் கூட அவன் யோசிக்கவில்லை.

எங்கேயாவது டாக்சி கிடைக்கிறதா? ரிக்ஷாவாவது நிறுத்தப்பட்டிருக்கிறதா? என்றுதான் யோசிக்கத் தொடங்கினான்! நல்ல வேளை! அங்கு வந்த ஒரு டாக்சியே, மீட்டர் சார்ஜ் போக மேலே இரண்டு ரூபாய் என்ற ஒப்பந்தத்தோடு அவனைச் சுமந்து கொண்டுபோய் அவனது விடுதியில் விட்டுச் சென்றது! படுக்கையில் போய் விழுந்தவன் விழுந்தவன்தான்!

* * *

"என்ன வாழ்க்கை வேண்டிக் கிடக்கிறது! பெண் பிறவி ஒரு பிறவியா? பெண்ணாகப் பிறப்பதுவே பாவம் சார்! பாருங்களேன்! பெண்ணாய்ப் பிறந்து மூக்கும் முழியுமாய் வளர்ந்துவிட்டதற்கப்புறம், அந்த ஜென்மம் படும்பாடு இருக்கிறதே! சேச்சே! நகரவேதனைகள்! காளையொருவனது கரம்பற்றும் வரையில் .........அடாடாடா! அதோடு முடிகிறதா! காளையின் தொடர்பால் கருவுற்றுவிட்டால், அந்த வேதனை —கருவை உருவாக்கித் தரும் அந்த பிரசவவேதனை..........சேசேசே!...... நான் இதற்காகச் சொல்லவில்லை சார்......மொத்தத்தில் பெண் ஜென்மமே பாவ ஜென்மம்! சார் என்னமோ நான் சொல்றேன்னு நினைக்காதீங்க.........கல்யாணம் செய்துக்கிறதுகூட அப்படித்தான்! என்ன வாழ்க்கை! என்ன குடும்பம்! நரக வேதனை!! — இப்படியான புதிய புதிய தத்துவங்களை உருக்கத் தொடங்கிவிட்டான்.

கல்லூரிப் படிப்பு முடிந்து, பெரிய மனிதர் ஒருவரின் பரிந்துரையால் நல்ல சம்பளமும்கிம்பளமும் கிடைக்கக்கூடிய வேலையொன்றைத் தேடி பெற்றுக்கொண்டதற்கு அப்புறமும் இதே தத்துவத்தைத்தான் அவன் பரப்பிக்கொண்டிருந்தான்! நாள், மாத, வருடக்கணக்கில்! வந்தவர், போனவர் எல்லார்க்கிடையும்!

இப்படிப்பட்ட சமயத்தில்தான், அவனுடைய தனிமை போக்கப்பட வேண்டும் என்பதற்காகவோ அல்லது கன்னி கழிக்கப்பட வேண்டும் என்பதற்காகவோ அல்ல, அவன் வாழ்க்கை முழுமையாக்கப்பட்டு முழுமனிதனாக ஆக்கப்படவேண்டும் என்பதற்காக செல்லத்தைத் தேடிப்பிடித்து மூன்று முடிச்சு போடச் செய்தனர் அவன் பெற்றோர்! அவனும் அப்போது ஒரு கடமைக்காகவே முடிச்சுப் போட்டு வைத்தான்! உடலுறவு கொள்ளக் கூடாது என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தான்! நினைத்துக் கொண்டு மட்டும்தானே இருந்தான். அதனால்தான் இப்போது பிரசவ விடுதியில் வந்திருக்க நேர்ந்தது!

அவள் வயிறு வீங்க வீங்கத்தான் அவனும் இந்த உலகத்துக்குத் திரும்பி வந்தான். வாழ்க்கையில் இப்படி இப்படியெல்லாம் நடக்கத்தான் செய்யும் என்பதையும் ஒப்புக் கொண்டான்! நிகழ்ச்சிகளை நாம்தான் நடத்திச் செல்லவேண்டுமேயொழிய, நிகழ்ச்சிகள் நம்மை நடத்திச் செல்ல அனுமதித்துவிடக் கூடாது என்பதை ஏற்றுக்கொண்டான்!

"இறைவா! எனக்குப் பெண் குழந்தையே பிறக்கக் கூடாது! என்று மனதிற்குள்ளேயே வழிபாடு நடத்திவந்தான்; இல்லை கோரிக்கை விடுத்துக்கொண்டிருந்தான்! அதனாலேயே அவன் செல்லத்திடம் "எனக்கு ராஜாதான் வேணும்!" என்றும் வேண்டிக்கொண்டான்!

* * *

மீண்டும் விடுதியின் உள்ளே இருந்து அழுகைக்குரல் கேட்டது. கடந்தகால நினைவுத் திரையிலிருந்து மீண்டான் ஜகதீசன்!

'செல்லம் எப்படி இருக்கிறாளோ?' என்று எண்ணிக்கொண்டே குழம்பினான். தனக்குப் பெண் குழந்தையே பிறந்துவிட்டால்?.........அவனால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. அதை மட்டுமா? தான் பெண் இனத்தை வெறுப்பவன் என்பதை, செல்லம் எப்படி [illegible]ரிந்து கொண்டாள்? என்பதைக் கூடத் தான் நினைத்துப்பார்க்க இயலாமல் தடுமாறினான்!

"மிஸ்டர் செல்லம் ஜெகதீசன்! என்ற இனிய குரல் கேட்டுத் திரும்பினான். அறைவாசலில் மருத்துவப் பணிப்பெண் தங்கச்சிலை யொன்றை கரங்களில் ஏந்தியபடி நின்றாள்!

ஆர்வத்தோடு எழுந்து ஓடினான். "நீங்க மருமகன்தான் தேடணும் மிஸ்டர்!" என்றாள் சிரித்துக் கொண்டே!

குழந்தையைக் கைகளில் வாங்கப் போனவனுக்கு ஒரு அதிர்ச்சி! "தான் மருமகன் தேடவேண்டுமா? பெண் குழந்தையா இது?"

குழந்தையை எடுப்பதா? வேண்டாமா?—தீர்மானிக்க முடியவில்லை அவனால்! ஓடினான், தலைதெறிக்க ஓடினான்! வீட்டில் வந்து கட்டிலில் குப்புறப்படுத்துக் கொண்டே குமுறினான். எதிரே செல்லத்தின் படம் அவனைப் பார்த்து சிரிப்பது போல இருந்தது. 'செல்லம் நீ என்னை வஞ்சித்துவிட்டாய்!" என்று சொல்லிக்கொண்டே அதனை எடுத்தான். அதன் பின்னாலிருந்து கீழே விழுந்த ஒரு கடிதம்—

"இல்லை, இல்லை! இயற்கை உன்னை வஞ்சித்தது" என்று கூறுவதுபோலிருந்தது. கீழே விழுந்தகடிதத்தைத் தடுமாற்றத்தோடு எடுத்துப் படித்தான்:

அன்புள்ள செல்லத்துக்கு,

என்னை மன்னித்து விடு செல்லம்! நான் எப்படியும் உன் திருமணத்துக்கு வரவேண்டுமென்றுதான் முயற்சி செய்தேன், முடியவில்லை. தோழி ஒருத்தியின் திருமணத்தில்கூட கலந்துகொள்ள முடியாமல் விதி விளையாடி விட்டது! ஆமாம் செல்லம்! நான் நிறைமாத கர்ப்பிணி!

முன்பு ஒரு முறை என் கடிதத்தில், ஜெகதீசன் என்பவர் என்னிடம் முறை தவறி நடந்து கொண்டதற்காக அப்பா, செம்மையாக உதைத்தார்! பாவம், எலும்புகள் தூள் தூளாகி இருக்கும்! என்று எழுதி இருந்தேனல்லவா—அதற்காக இப்போது மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறேன்! அந்த ஜெகதீசன்தான் உன் அத்தான் என்று எனக்கு என் கணவர் மூலம் தகவல் தெரிந்தது! நிறைமாதத்தைக்கூட அலட்சியம் செய்துவிட்டாலும், இதனை நான் அலட்சியம் செய்ய முடியுமா! மனதைத் தேற்றிக்கொள் செல்லம்! திருமணங்கள் நம் விருப்பப்படி நிச்சயிக்கப்படுவதில்லை.

ஆருயிர்த்தோழி,
சக்கு.

எல்லாம் அவனுக்குப் புரிந்துவிட்டது! செல்லத்தின் இடக்குப் பேச்சின் பொருள் மட்டுமல்ல, திருமணமும், பிள்ளைப்பேறும்கூட நம் விருப்பப்படி நடப்பது அல்ல என்பது தெளிவாகத் தெரிந்தது.

மீண்டும் ஓடினான் 'பிரசவ விடுதியை நோக்கி. வாயிலிலேயே விடுதி காப்போன் தடுத்து நிறுத்தினான்.

"நேரமாகிவிட்டது சார்! காலையிலே வாங்க!" என்றான்!

'பெண் குழந்தை வேண்டாம்!'— என்று தத்துவம் பேசிக்கொண்டிருந்தவன், தன் பெண் குழந்தையைப் பார்க்க எவ்வளவு ஆவலோடு வந்திருக்கிறான் என்று அவனுக்குத் தெரியுமா?

# சோழ நாடு!

—[ புலவர். மணிமுடிச்சோழன் ]—

உலகத்தின் அச்சாணி உழவே என்ற
உலகமறைத் திருக்குறளின் கருத்துக் கேற்ப
நிலவளத்தால் நீர்வளத்தால் ஏர்ந டத்தி
நலம்வளர்க்கும் மருதநிலம் திருச்சி தஞ்சை!
வளமளிக்கும் வண்டலினைத் தருவாள் பொன்னி!
வறுமையினைப் போக்கஉண வளிப்பார் மக்கள்!
பலநாட்டு மக்களுக்கும் தஞ்சந் தந்த
பசியறியாப் பூம்புகார்ச் சோழ நாடு!

இமயத்தில் பெயர்பொறித்து சோழ நாட்டின்
இறவாத புகழ்பொறித்தான் கரிகால் வேந்தன்!
சமயத்தில் மறுமலர்ச்சிக் கொள்கை தன்னில்
சரித்திரத்தில் புகழ்பதித்தோர் சோழ நாட்டார்!
இமயம்போல் தமிழ்மொழியின் வளர்ச்சிக் காக
எழுந்தபல இலக்கியங்கள் சோழ நாட்டில்!
தமதென்பார்ச் செருக்கறுத்து நமதென் பாரை
தமிழ்நாட்டுக் களித்தபுகழ்ப் பொன்னி நாடு!

இரும்பிடர்த் தலையார் கோப்பெருஞ் சோழன்
சிறுகருந் தும்பியார் கிள்ளி வளவன்
பொண்பாற் புலவர் காவற் பெண்டு
வெண்ணிக் குயத்தி தமிழ்நலங் கிள்ளி
கோப்பெருஞ் சோழனின் தோழர் பொத்தியார்
இப்படிப் பலபேர் இருந்த நாடே!

கல்லணையால் கல்லணையைக் கரிகால் சோழன்
காவிரியில் கட்டிவைத்தான் சீனர் போல!
சொல்லணையால் கரிகாலன் வீரந் தன்னை
சொல்லிவைத்தார் பட்டினப்பா லையேட்டில்! மக்கள்
நேல்லணையாய் நெற்குவித்தார்! பசி நடக்க
நாள்தோறும் ஏர்நடத்தி வளத்தைச் சேர்த்தார்
நல்லறிஞர் பேரறிஞர் அண்ணு ஆட்சி
நலம்பாடும் கவிஞர்பலர் சோழ நாட்டார்!

நெஞ்சத்தை அள்ளுகின்ற சிலம்பும், புத்த
நெறிகூறும் மேகலையும். நரிவி ருத்தச்
செஞ்சொல்லன் திருத்தக்க தேவன் செய்த
சிந்தாம ணியும், தேர ழுந்தூர்க் கம்பன்
நெஞ்சுருகிப் பாடிவைத்த பாட்டும், கோழை
நிமிர்ந்துஎழக் கலிங்கத்துப் பரணி நூலும்,
அஞ்சாத தமிழ்ப்புலவன் ஒட்டக் கூத்தன்
ஆக்கியதோர் உலாப்பாட்டும் தந்த நாடு!

முச்சங்கம் வைத்துதமிழ் வளர்த்தான் வீர
மறவர்களின் தமிழ்த்தலைவன் பாண்டி வேந்தன்!
அச்சங்கம் அழிந்ததனுல் சோழ நாட்டை
ஆண்டபுகழ் சரபோசி மராட்டி மன்னன்
அச்சங்கத் திற்கிணையாக தஞ்சை தன்னில்
அரியதமிழ் சரசுவதி மகாலைக் கட்டி
நச்சரவக் கடிமுதலாய் மருத்து வத்தில்
நல்லபல நூல்சேர்த்தான்! நோயைத் தீர்த்தான்!

தமிழுக்குத் தாய்வீடு பாண்டி! அந்த
தமிழுக்கு மணிவீடு சோழ நாடு!
அமுதத்தில் நஞ்சினைப்போல் தமிழில் வேத
ஆரியரின் வடமொழியா? என்று கேட்ட
தமிழியக்கத் தனித்தலைவன் நாகை தந்த
தமிழ்மலையாம் மறைமலையார்! தனது வாழ்வைத்
தமிழுக்கே எனச் சொல்லி தீக்கு ளித்தத்
தமிழ்மகன்யார்? திருச்சிதந்த சின்னச் சாமி!

பலர்புகழும் 'தமிழ்த் தென்றல்' ஆரூர் தென்றல்!
புதியகலைத் தென்றல் தமிழ்க் கவிஞர்! இந்த
உலகம்புகழ் ஒரு கவிஞன்! உவமை யாலே
உயர்கவிஞன் தமிழ்க்கவிஞன் சுரதா! சந்தம்
பலபாடும் உணர்ச்சி நடைப் பாட்டு வேந்தன்
பொன்னிவள நாடளித்த புலவர் பொன்னி!
நல்லாசான் பாலசுந்த ரனுர்! கரந்தை
நமக்களித்த கவியரசும் சோழ நாடே!

யாழ்நூலைத் தந்ததுயார்? விபுலா நந்தர்!
யாழ்முதலாய் இசைக்கருவி செய்வ தெங்கே?
வாழ்ந்ததமிழ் வாழ்வதற்கே தான்வ ளர்ந்த
வரலாற்றுப் புகழிடத்தார் உவேசா! கல்கி!
வீழ்ந்ததமிழ் நாட்டுவர லாற்றைத் தந்த
வாண்டையார்! சிவஞான முனிவர்! நாட்டார்!
ஆழ்ந்ததமிழ்ப் புலமைஞானி! பிள்ளை போன்ற
அருந்தமிழக் கடல்பலவாய் வாழ்ந்த நாடு!

தமிழுக்கு அச்செழுத்தை ஆக்கித் தந்த
தனிப்பெருமை தரங்கைக்கே உரிய தாகும்!
தமிழ்த்தொண்டன் சீகன்பால்க் அதனைச் செய்தான்!
தமிழுக்கோர் அகராதி ராட்லர் தந்தான்!
தமிழ்மொழிக்கு அலங்கார இலக்க ணத்தை
தண்டியலங் காரத்தை தந்த நாடு!
அமுதத்தேன் மூவருலா! பட்டர் தந்த
அந்தாதி திருமந்திரப் பெருமை அன்றோ!

சங்கத்தின் தமிழ்வளர்க்கும் சங்கம்! இன்று
சரித்திரத்தில் உயிர்நாடி கரந்தை! நல்ல
சிங்கத்தின் உறுதியைப்போல் உறுதி நெஞ்சச்
சிங்கங்கள் தமிழ்கற்கும் தமிழ்ப்பூஞ் சோலை!
பங்குனியில் தென்றலைப்போல் உலக மெங்கும்
பசுந்தமிழைப் பரப்பிவரும் கரந்தைச் சங்கம்!
நெஞ்சுருக்கும் நாதசுர இசையில் மன்னர்
நல்இராச இரத்தினமும் சோழ நாடே!

அறிவியலால் புகழ்பெற்றுர்! பரிசு பெற்றுர்!
அயோத்தி இராமனல்ல! குடந்தை ராமன்!
அறிஞர்பலர் போற்றுகின்ற கனித மேதை!
அன்பழகன்! நெடுஞ்செழியன்! பிறந்த நாடு!
தெரியாத வடலூரார் இராம லிங்கம்!
தேன்சொட்டும் தமிழ்ப்பாட்டுத் தாயு மானுர்!
அறிவுக்கோ எல்லையில்லை! சோழ நாட்டில்
அதுபோல கவிஞருக்கும் அளவே இல்லை!

# மனசாட்சியை மறந்துவிடு!

[ கஸ்தூரி நடராசன் ]

"வேண்டுவது, பைத்தியம் வேண்டாதது வாழ்வு. வேடிக்கையாக இருக்கிறது! உங்கள் இந்த முடிவுக்குக் காரணம் சொல்ல முடியுமா சாரதி?"

"காரணம் தெரிந்துதான் மருந்து கொடுப்பீர்களா டாக்டர்?

"ஆமாம் அதுதான் மருத்துவ சாத்திரத்தின் விதி" டாக்டர் நிறுத்தினார்,

"ஆமாம் டாக்டர்! பொய்யாமொழியார் கூட நோய் நாடி அதன் முதல் நாடவேண்டும் என்றார்"

"பின் ஏன் நீ இதற்குப் பதில் சொல்லக் கூடாது?"

'டாக்டர்...அது உங்களுக்கு வேண்டாம். நீங்கள் நல்ல டாக்டர், இந்த உதவியைக்கூடச் செய்யக் கூடாது."

"உடல் குணமடைய மருந்து கொடுப்பவன்தான் நல்ல டாக்டர். நல்ல உடலைக் கெடுக்க மருந்து கொடுப்பது மருத்துவ சாத்திரத்திற்கு நான் செய்யும் துரோகம் மட்டுமல்லாமல் மனித இனத்திற்கே செய்யும் துரோகமும் ஆகும்."

"அப்படியானால் நான் கேட்கும் இந்த உதவியை உங்களால் செய்ய முடியாது இல்லையா டாக்டர்"

"உதவி செய்வேன்...அது நல்ல நோக்கத்திற்காக இருந்தால்"

"நீங்கள் என்னைப் பைத்தியமாக்கி விடுவது என்னை நீங்கள் வாழ வைப்பதுபோலாகும் டாக்டர்."

"வேடிக்கையாக இருக்கிறது சாரதி உங்கள் விளக்கம். பைத்தியமாகவே வாழ நினைக்கிறீர்கள் இல்லையா?"

"ஆமாம் டாக்டர், ஆமாம். நான் சித்த சுவாதீனமில்லாமல் வாழ வேண்டும். ஊர் ஊராகத் திரியவேண்டும். ஊர் மக்கள் என்னைப் பார்த்து கேலியும் கிண்டலும் செய்யவேண்டும். கல்லால் நான் அடிபட வேண்டும். கசிந்து வரும் இரத்தத்தைத் துடைக்க எந்த ஒரு மனித மனத்திற்கும் இரக்க உணர்ச்சியே வரக் கூடாது. என் பசிக்கு அன்னமிட தாய்மார்கள் தயங்க வேண்டும். நான் பசியால் துடித்துத் துடித்து துவண்டு போகவேண்டும். வெயிலில் அலைந்து திரியவேண்டும்'. வேதனை என்னைத் துளைக்கவேண்டும். என் அறிவுக்கு நல்ல பாடம் கிடைக்க வேண்டும். என் உடல் செய்வதறியாது நிழலைத் தானாக நாடவேண்டும் ஆமாம் நானேதான் இந்த உலக மக்களால் இரக்கமின்றி நடத்தப்பட வேண்டும். அப்படி ஒரு ஆசை. அது தணிய உங்கள் மருந்து அவசியம்."

"இவ்வளவும் நீ யாருக்காக செய்யப்போகிறாய்?" டாக்டர்விடவில்லை.

"டாக்டர்......நீங்கள் எப்படி சுற்றி வளைத்துக் கேள்வி கேட்டாலும் பதில் ஒன்றுதான் டாக்டர், பதில் ஒன்றுதான். எனக்காக நான் இழைத்த குற்றத்திற்காகத்தான்."

"ஆக, நீ ஏதோ தவறு செய்து விட்டாய். அதற்குக் கழுவாயாகப் பைத்தியமாய் வாழ முற்படுகிறாய். அப்படித்தானே?"

"ஆமாம் டாக்டர். ஆமாம்"

"ஏதாவது கொலை செய்துவிட்டாயா சாரதி?"

"ஆமாம் உள்ளத்தைக் கொலை செய்துவிட்டேன்."

"யார் உள்ளத்தை?" டாக்டர் மேலும் தொடர்ந்தார்.

"பெண் உள்ளத்தை" அவன் தலைகுனிந்து கொண்டான். "டாக்டர் என்ன வேண்டும் உங்களுக்கு?"

சாரதி உண்மையைச் சொல்லுங்கள்; உரியதைச் செய்கிறேன்.',

"சொல்லுகிறேன் டாக்டர் சொல்கிறேன். நான் வாழ விரும்பியதில் தப்பில்லை. அவ்வாழ்க்கையை மலர்த் தோட்டமாக்கி அழகு பார்த்து அதிலே மந்த[illegible] காண நினைத்தேனே அதி[illegible] குறைதான். தாயன்பை இழந்த நான் தந்தையையும்விட்டு வெகு தொலைவில் தன்னந்தனியே வாழ்ந்து வந்தேன். என்னை நானே ஏமாற்றிக் கொண்டேன். மற்றவர்கள் என்னை ஏமாற்றிவிட்டார்கள் என்று சொல்லி என்னை நான் பரிசுத்தமானவனாகவோ, உண்மையானவனாகவோ, உத்தமனாகவோ, நேர்மையானவனாகவோ காட்டிக்கொள்ள விரும்பவில்லை......

நான்தான் கொடுமையை இழைத்துவிட்டேன். குறையை வேண்டுமென்றே கற்பித்தேன். சுந்தரி! ஆம்......அவள்தான் என் வாழ்வில் பூத்து உதிர்ந்த மலர். அவள் பெயரளவில் மட்டும் சுந்தரி அல்ல. இதயத்திலேயும் எண்ணத்திலேயும் சுந்தரி, சுந்தரிதான் அருள் இல்லார்க்கு அவ்வுலகமில்லை பொருள் இல்லார்க்கு இவ்வுலகமில்லை' என்று திருக்குறளார் சொன்னதுபோல பணத்தால் சிறந்தவனாக, உயர்ந்தவனாக இல்லாத நான் வளமான வசந்தமான வாழ்வை எதிர்பார்த்தது என் குறைதான். என்ன செய்வது ஆண்டவன் படைப்பிலே அனைவருமா பொன்னும் பொருளும் பெற்று பொலிவுடன் வாழ்கிறார்கள்? நானும் பொன்னும் பொருளும் பெற்று வாழ விரும்பவில்லை. பொன்னைத் தேடி ஓடவில்லை, பொருளைத் தேடி அலையவில்லை. நான் தேடியதெல்லாம் அன்பு வாழ்க்கை — அற வாழ்க்கை. அந்த அன்பு வாழ்க்கை மனைவியால் கிடைப்பது சிறந்தது என்று நினைத்தேன். சுந்தரியின் பழக்கம் எனக்கு ஏற்படுமுன் உண்மையிலேயே நான் அறியாத ஒன்று. விலைகொடுத்து வாங்கக்கூடிய பொருளாக அன்பு இருந்திருக்குமேயானால் எளியவனான நான் நிச்சயமாக அந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கமாட்டேன். அன்பிற்கு நல்ல மனம் இருந்தால் போதும் என நினைத்தேன். அந்த மனம் அவளிடம் இருப்பதாக நான் உணர்ந்தேன். அவ்வளவுதான். அதில் வந்த கோளாறுதான், நான் அவளை நேசித்தேனா? அவள் என்னை நேசித்தாளா? என்பது இன்றுவரை தெளிவில்லாத ஒன்றாக இருந்து வருவது. எது எப்படி இருந்தாலும் என்னை அவளிடம் இழந்தேன் என்று சொல்லிக் கொள்வதில் தவறில்லை. ஆனால் உண்மை என்ன என்பதை ஆராய என் மனம் முயலவில்லை. நான் கொண்டது கைக் கிளைக் காதல் என்று சொல்லவும் முடியாது. மொத்தத்தில் அவள் முடிவை என்னால் அறிய முடியவில்லை. அவள் அழகில் ஒன்றும் நான் மயங்கி விடவில்லை. அவள் அன்பை, அன்பின் முதிர்வான காதலைப் பெற முயன்றேன். அது தவறா? அல்லது கூடாதா? அன்பின் முதிர்வை நான் அடையக்கூடாது என்ற ஒரே எண்ணம் போலும் அவளுக்கு. அதைக் கூட நான் சொல்ல விரும்பவில்லை. நான் அதில் ஆசையை வேரூன்றச் செய்தது தவறுதான். கனவு கண்டதும் கூடாததுதான்.

அவள் மனம் அதை நாடுகிறதோ இல்லையோ என்னை அவள் அவளின் பேச்சுக்களால் கொன்றிருக்க வேண்டாம். பழிதீர்த்துக் கொண்டிருக்க வேண்டாம். இப்போது அவள் எங்கே என்று நான் கேட்க வேண்டியதில்லை. அவள் எங்கோ நிம்மதியாக இருக்கின்றாள். என் நெஞ்சத்து உணர்ச்சிகளைப் புரிந்து

கொண்டாளோ இல்லையோ எனக்குத் தேவை இல்லை, அது.

என்னை விடவுமில்லை, தொடரவுமில்லை. நான் எதிர்பார்த்தது அன்பின் வாழ்க்கையைவிட அன்பின் முதிர்வான காதல் வாழ்க்கையை கலித்தொகை வாழ்க்கையை குறுந்தொகை வாழ்க்கையை அவளே.... அதற்குத்தான் தகுதியில்லை என்று கூறி மழுப்பிவிட்டாள். இருப்பினும் என்மீது பரிவு காட்டித் தொடர்ந்தாள். அவள் என்னிடம் கூறிய காரணத்தைவிட நான் அறிந்த காரணம்தான் என்னை மிகவும் வேதனைக்குள்ளாக்கியது. அவள் வேறு ஒருவருக்கு மனைவியாகி மங்கல வாழ்க்கை நடத்த எண்ணங்கொண்டாள் என்பதை இப்போது அவள் இந்த ஊரையேவிட்டு வெளியேறியவுடன் அறிந்தேன். பாவம்....அவள் எண்ணத்திற்கு-செயலுக்கு எதிராக என் எண்ணங்களை வளர்த்து வந்தேன். அந்த மங்கல மங்கை வாழ்க்கையில் அடையவேண்டிய பதினுறு செல்வங்களையும் பெற்று வள்ளுவர் வகுத்த இல்லறத்தின்படி நல்லறம் செய்து வாழட்டும். அவள் அன்பு வாழ்க்கையைக் கெடுக்க நினைத்தேன். ஆதரவு காட்ட நினைத்த அந்த நெஞ்சத்திலே புயலைக் கிளப்பிவிட்டேன். அவள் அன்பு செய்தது முறைதான். ஆனால் அதை உணர மறந்தது குறைதானே. அது எனக்கு அப்போது விளங்கவே இல்லை. நான் தொடர்ந்தேன். இந்த எண்ணம் தூய்மையான அந்த சுந்தரியின் மனதைக் கெடுத்திருக்கவேண்டும். பாவம், அவள் இப்போது எங்கோ... போய்விட்டாள். அவளைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டேன். நல்ல மனதைக் கெடுத்தேன். கொடுமையை வள்ளலாக வாரி வழங்கினேன். செய்ந்நன்றி கொன்றேன். எனக்கேது உய்வு. நான் இறந்து விடலாம்,

அதற்குமருந்து உங்களிடம்வாங்க வேண்டியதில்லை. ஆற்றிலோ,குளத்திலோ, ஒரு முழக் கயிற்றிலோ என் வாழ்வுக்கு முற்றுப் புள்ளி வைத்துக் கொள்ள முடியும். செய்த தவறுக்கு தண்டனையடைய வேண்டுமென்று என் மனம் விரும்புகிறது. நான் சுய நினைவோடு இருந்தால் பெண்கள் என் கண்களில் படுவார்கள். அப்போது சுந்தரி என் நினைவைத் தொடுவாள். என் மனம் மீண்டும் வேதனைப்படும். அந்த வேதனையை என்னுல் தாங்கிக்கொள்ளமுடியாது. நான் பைத்தியமாகி விட்டால் எனக்கு என் நினைவே இருக்காது. ஆனுல் நான் செய்த குற்றத்திற்கு தண்டனையை அனுபவிக்கிறேன் என்று அவள் மனம் நினைக்கவேண்டும். அதில் அவள் மகிழவேண்டும். அவள் மகிழ்வதுகூட எனக்குத் தெரியக்கூடாது. அவள் மகிழ்கிருள் என்று நான் அறிந்தால் மீண்டும் அவளைப்பற்றித் தப்பான உணர்வு எனக்கு எழும். ஆகவேதான் நான் பைத்தியமாகவே இருக்க விரும்புகின்றேன். போதுமா டாக்டர்?''

"இதற்கு வழி அதுவல்ல சாரதி. மனிதனுடன் வாழ்வது மனம். அந்த மனம் எந்த ஒரு நிகழ்ச்சிக்கும் அது சாட்சியாக நிற்கிறது. சாதாரண சம்பவங்களையும் சந்திக்கும், கொடுமையான சம்பவங்களையும் சந்திக்கும். கொடுமையான சம்பவத்தை சந்தித்த மனம் அதை நீண்ட நாள் மறக்காது. அது மட்டுமல்லாமல் வருந்திக்கொண்டே இருக்கும்.

சுயநலத்திற்காக சில சமயங்களில் மனம் மாறுபட்டும் நடக்கும். ஆனுல் அதை அந்த மனம் மறக்க முடியாத நிலை பெறும்போதுதான் நிம்மதியையே இழந்து திசைமாறிப் போன கலம்போலாகிவிடுகிறது. மனிதன் ஒன்றை மட்டும் நினைத்து, அந்த நினைப்பிலே உழல்வதுதான் எதிர்கால வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி வைத்துக்கொள்வதுபோலாகும். வாழ்க்கையில் நல்லதும் நடக்கும், கெட்டதும் நடக்கும். நடந்து போன கொடுமைகளை நினைவில் வைத்துக்கொள்வது தன் வாழ்வில் பின் நோக்கிப் போவதுபோலாகும். அது வள[illegible] பருவத்தில் இருக்கும் உன் [illegible]ற வாலிபர்களுக்கு பெரும் வைரி என்பதை மறந்து விடாதே. ஆக, நடந்ததை ஒதுக்கி நீ ஒதுங்கிச் செல். நீ வாலிபன் உனக்கு எதிர்காலம் உள்ளது. அது எழிலுடையதாக இருக்க வேண்டுமானுல் ஒரேஒரு வழிதான் உண்டு. அவ்வழி, நடந்தவைகளை மறந்து நடக்க இருப்பவைகளை நினைத்து நல்வாழ்வு வாழ்ந்து காட்டு." டாக்டர் நிறுத்தினுர்.

'அதாவது மனசாட்சியை மறந்து விடவேண்டும் அப்படித்தானே டாக்டர்?" சாரதி அமைதியாகக் கேட்டான்.

"வேறு வழி இல்லை சாரதி. அப்போதுதான் உன் மனம் நிம்மதியடையும்" — என்ருர் எழுந்துகொண்டே!

●

6-ம் பக்கத் தொடர்ச்சி

களுக்கு மட்டுமே அதிகாரம் அத்தனையும் வழங்கும் பழைய சர்வாதிகார அரசினரின் சட்டங்களாக இருக்கின்றன என்ருல் — முழுமையான ஜனநாயகம் மக்கள் மத்தியிலே வந்தது என்று பெருமைப்பட்டுக்கொள்ள முடியுமா?

சுதந்திரம் பெற்ருேம்; ஓட்டுரிமை வந்தது. ஆனுல் இன்னமும் ஏன் மொகலாயர்களின் அரசியல் அமைப்பு வழிமுறைகள்?

ஜனநாயகத்தின்சூட்சமமே—அர்த்தமே—அதிகாரத்தை மக்களின் பிரதிநிதிகளுக்குப் பகிர்ந்துகொடுப்பது தானே! அதற்குத்தானே சுதந்திரம் வேண்டி நின்ருேம்!

ஆனுல் இன்றைய நிலைமை என்ன?

திரு. வி. பி. மேனன் கூறுவது போல — சேலம் இரும்புத் தொழிற்சாலை வேண்டுமா? டெல்லிக்கு "மனுப்போடத்தான்'' உரிமை இருக்கிறது; அமைக்க அல்ல!!

இந்தநிலை இனிமேலும் தொடர வேண்டுமா?

சுல்தான்களின்ஆட்சிமுறை,சுதந்திரம் பெற்றபிறகும் நீடிக்கவேண்டுமா? உண்மையான ஜனநாயகம் நமக்கு வேண்டாமா?

நமது தேவைகளை நாம் உணரும் போது அவைகளை நாமே நிறைவேற்றிக்கொள்ளும் அதிகாரம் நமக்கு வேண்டாமா?

இதைத்தான் நமது மாண்புமிகு முதலமைச்சர் அண்ணு அவர்கள் கேட்கிருர்கள். சட்டம் பயின்ற மேதைகள், நிருவாகத்துறை நிபுணர்கள், பொருளாதார விற்பன்னர்கள் கூறியதை — ஒப்புக்கொள்வதைத் தான் அண்ணு அவர்களும் கேட்கிருர்கள். என்ருலும் காமராசருக்குக் கோபம் வருகிறது!

கோபத்துக்குக் காரணம் டெல்லி சுல்தான்களுக்கு நாம் என்றென்றும் நமது வளத்தை—முன்னேற்றத்தை—உரிமைகளை அடகு வைத்துவிட்டு, தாழ்ந்து, அடிமைகளாய், ஆமைகளாய்க் கிடக்க வேண்டும் என்ற சதியாலோசனையா? அல்லது இருந்ததை இழந்ததால் ஏற்பட்ட ஆத்திரத்தில் நல்லதைக்கூட நாசமாக்க வேண்டும் என்ற பழிவாங்கும் உணர்ச்சியா? — தெரியவில்லை நமக்கு!

இந்த அரசியல் சதுரங்கத்தைத் தமிழகம் புரிந்து கொண்டாலே போதும்—டெல்லி நம்மை ஏறிட்டுப் பார்க்கத் தொடங்கிவிடும்!

— பானுதாசன்,

# சார், தெரியுமா சேதி?

## தேசத் துரோகியாம்?

ஆசை வெட்கமறியாது என்பார்கள்! அப்படித்தான் இருக்கிறது அரியானா முதலமைச்சர் ராவ் வீரேந்திர சிங் என்பவரது பேச்சு. அண்மையில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் பேசும்போது "இந்தியை எதிர்ப்பது தேசத் துரோகம்" என்று பேசி இருக்கிறார். அவரது அமைச்சரவையே அந்த 'துரோகத்தனத்துக்கு' ஆளாகி இருக்கிற வேளையில் இந்த மணியான கருத்தை உகுத்திருப்பதானது, பதவி ஆசை, எப்படி எப்படிப் பேச வைக்கிறது? என்றுதான் நினைத்துப் பார்க்கத் தோன்றுகிறது. "ஐ. நா. மன்றத்தில்கூட இந்திய உறுப்பினர்கள் தங்களிடையே ஆங்கிலத்தில் பேசிக்கொள்வது, மிகவும் வெட்கக்கேடானது!" என்றும்கூட அவர் பேசி இருப்பது, அவரது இந்தி வெறியைப் புலப்படுத்திக் காட்ட நல்ல சான்றாகவே இருக்கும்.

## தீயினும் அஞ்சுக!

கடந்த ஜூலைத் திங்களில் தமிழகத் தலைநகரில் தீ விளையாட்டை நடத்திக் காட்டிய தீயவர்களின் தொடர் நாடகம், இந்தக் கிழமை, இடைத் தேர்தல் முடிவுக்குப் பின் மீண்டும் சென்னையில் தொடர்ந்தது. இருந்ததை இழந்த எரிச்சலும், இடிபட்ட வருத்தமும், மக்களது வாழ்க்கைப் பிரச்னையோடு விளையாடிப் பார்க்கிறது. பட்டும் புத்தி வரவில்லை அந்தப் பாவிகளுக்கு. பாவம், இதற்காகக் கைது செய்யப்பட்டிருப்பவர்கள் காங்கிரசுக்காரர்களாம்! அதனால் போலீஸ் கமிஷனர் தலைமையகம் முன்பு மாபெரும் அணிவகுப்புப் போராட்டமாம்! சட்டம்-ஒழுங்கைக் காத்து ரட்சித்த சர்வாதிகாரிகளின் கொக்கரிப்பு இப்படி! இதே வேளையில் சென்னையில் பாதிக்கப்பட்ட குடிசைப் பகுதி மக்களும் இக்கிழமை இறுதியில், சென்னை சத்தியமூர்த்தி பவன் முன் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்த இருக்கிறார்கள். இதற்கிடையே, குடிசைப் பகுதிகளில் கழகத் தொண்டர்கள் காவல் புரிந்து வருவது, காங்கிரஸ் கயமைகளுக்குக் கண்ணெரிச்சலாயிருக்கிறது, கழகத்துக்காரன் காவலுக்கா என்று! இந்திய அரசியலும், ஜனநாயகத் தத்துவமும் தீப்பற்றி எரியும்போது சில குடிசைகள் மட்டும் எரிந்தால் என்னவாம்! என்ற எண்ணமோ, என்னவோ!

## இந்தியா ஒரு நாடாம்!

"இந்தியா ஒரு நாடாக இல்லை; ஆகும் முயற்சியில் தான் இருக்கிறது; அந்த முயற்சியில் நல்லெண்ணம் இருக்கவேண்டும் என்றுதான் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் பேசினார்கள். எதையும் ஒப்புக்கொண்டே பழக்கப்பட்டறியாத பாவம் பக்தவத்சலம் மதுரைக்குப் போய் மறுத்திருக்கிறார். பிற்போக்கான கருத்து என்றும் சொன்னாராம். இந்த முற்போக்காளர்! இந்தி மூலமே இந்தியாவை ஒன்றாக்கிவிடத் துடிக்கின்ற வடக்கத்தி ஆட்சியின் மொழித் திணிப்பு விவகாரமும் ஆங்கில ஒழிப்பு நடவடிக்கைகளும் எதனால் என்பதை எண்ணிப் பார்ப்பது பிற்போக்குப் புத்தி என்று விட்டு விட்டாரோ என்னவோ! நாட்டின் இன்றைய மொழிச் சிக்கலும் அதன் பின் விளைவுகளும் துணைக்கண்டத்தை எப்படிக் கொண்டுவந்து விட்டிருக்கிறது என்பதை பக்தவத்சலமல்ல — துணைக் குடியரசுத் தலைவர் கிரி எண்ணிப் பார்த்திருக்கிறார். 'சரியான தலைமை இன்றி நாடு சிதைந்து வருகிறது'' என்று ஆமதாபாத்தில் பேசி இருக்கிறார். பொருள் என்னவாம்! மாநில நலன்கள் பேணப்படாது, இந்தி நலம் பேணப்படுவதன் ஆபத்தைச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதற்கு பதில் ஏதும் சொல்வாரோ பக்தவத்சலம்?

## நம்பாதீர்கள்!

பிரசங்கங்களை வைத்துக்கொண்டு ஒரு முடிவுக்கு வந்துவிடாதீர்கள்'' என்று உள்துறை அமைச்சர் சவாண் சொன்னதாக மாஜி பரோடா மன்னர் பத்தே சிங்கெய்க்வாட், நிருபர்களைக் கூட்டிவைத்துப் பேசியுள்ளார் பம்பாயில்! மன்னர்களுக்குக் கொடுக்கும் உதவித் தொகையை நிறுத்திவிட வேண்டும் என்பது காங்கிரசின் விருப்பம். கட்சிக் கூட்டத்திலும் பலமாக அடிபட்டது ஒரு வதந்தியாக! தலைவர்கள், அமைச்சர்கள் கூட மேடையிலே முழங்கினார்கள். இதன் எதிரொலியாக மாஜி மன்னர்கள் ஒன்றுபட்டார்கள் சமஸ்தானாதிபதிகள் கூடினார்கள். குழுவோடு சென்று சவாணைச் சந்தித்தார்கள். அந்த சந்திப்புக்குதான் இந்தப் பதில்! 'பிரசங்கங்களை வைத்துக்கொண்டு முடிவுக்கு வந்துவிடாதீர்கள் என்று! இந்தி பற்றியும் அரசின் கொள்கைகள் பற்றியும், புதிய புதிய சட்டங்கள் பற்றியும், நேரு வாக்குறுதிபற்றியும் காங்கிரஸ் அமைச்சர்கள் பல பிரசங்கங்கள் செய்திருக்கிறார்கள். அதுவும் இப்படித்தானா என்று கேட்கத் தோன்றுகிறது! காங்கிரசின் பத்து அம்சத் திட்டம்பற்றிய அமுல்பற்றி சர்க்கார் முடிவும் செயலும் என்ன என்ற வினாவிற்குக்கூட சவாணின் பதிலைப் பொறுத்திக்கொள்ளலாமா?

## என்னதான் நடக்காது!

காந்தியடிகளின் பேத்தியான குமாரி மணிபென் காந்தி அனந்தப்பூர் வந்து தங்குவதற்காக விருந்தினர் விடுதியில் இடம் 'ரிசர்வ்' செய்திருந்தார். அதன்பின்


அறிஞர் அண்ணா

அவர்களின்

புதியதொடர்கதை

?

விவரம் அடுத்த இதழில்!

## ராஜமானியம் - ஒரு புள்ளி விவரம்!

இந்தியாவில் உள்ள 279 முன்னாள் மன்னர்கள் மொத்தமாக ரூ. 4.81 கோடியை, இந்திய அரசிடமிருந்து மானியமாக ஆண்டு தோறும் பெற்றுவருகின்றனர்!

1967–68–ம் ஆண்டின் வரவு–செலவுத் திட்டத் தொகையான சுமார் ரூ. 3,000 கோடியில், இது 0.15 சதவிகிதமாகும்.

இந்த 279 பேர்களில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் ஜாகிர்தார், தாலுக்தார் பேன்ற மிகச் சிறிய அந்தஸ்து உள்ளவர்கள்; சில நூறு ரூபாய்களை மட்டும் மானியமாகப் பெறுபவர்கள்; இவர்களில் ஒருவர், ஆண்டொன்றுக்குப் பெறும் மானியம் ரூ. 16 மட்டுமே!

179 மன்னர்கள் ஆண்டொன்றுக்கு ஓர் இலட்சம் ரூபாய் பெறுகின்றனர்!

78 மன்னர்கள், ரூ. 1 இலட்சம் முதல் 5 இலட்சம் வரையில் பெறுகின்றனர்!

24 மன்னர்கள், ரூ. 5 இலட்சத்திற்குமேல் மானியம் பெறுகின்றனர்!

கடந்த சில ஆண்டுக் காலத்தில் இந்த 24 பேர்களில் 9 பேர் தாங்களாகவே முன்வந்து, உதவித் தொகையைக் குறைத்துக் கொண்டதன் மூலம் அரசுக்குக் கிடைத்திருக்கும் தொகை ரூ. 81 இலட்சமாகும்.

அந்த மாவட்டத்துக்கு விஜயம் செய்யவிருக்கும் ஒரு அமைச்சருக்கு அந்த இடம் வேண்டுமென்பதற்காக ரிசர்வேஷனை 'கேன்சல்' செய்துவிட்டார்களாம்! 'ஒரு சிறிய விஷயத்திலேயே இப்படி நடந்திருக்கிறது என்ருல் முக்கியமான விஷயங்களில் என்னதான் நடக்காது? என்று கேட்டிருக்கிருர் மணிபென் காந்தி!

## கொடுத்துப் பெறு!

"Give respect and Take respect" என்பது ஆங்கிலப் பழமொழி. மரியாதைக் கொடுத்துத்தான் மரியாதை பெறவேண்டும், மற்றவர்களை மதிக்கத் தெரிந்தால்தான், தானும் மற்றவர்களால் மதிக்கப்பெற முடியும். தனிப்பட்ட மனிதனுக்கு மட்டுமல்ல — ஒரு சமூகத்திற்கும் நாட்டிற்கும் இது பொருந்தும். மேலாக அரசியல் கட்சிகளுக்கும்கூடப் பொருந்தும். அரசியல் கட்சிகள் என்கிறபோது, கட்சிகள் ஒவ்வொன்றும் தனித்தனிக் கொள்கைகள் உடயவை என்பது தானுகவே பெறப்படும். பல்வேறுபட்ட கருத்து வேறுபாடுகள் இருப்பதனுலேயே பல்வேறு கட்சிகளாகவும் அவை இயங்குகின்றன. கருத்து வேறுபாடுகளைப் பேசித் தீர்த்துக்கொள்ள முடியும் என்பார்கள். தீராத விவகாரங்கள்தான் போராட்ட முனைக்குச் செல்கின்றன. எந்தக் கட்சியாயினும், பிரச்னைகளை, அவை தீர்க்கப்படவேண்டும் என்ற எண்ணத் தூய்மையுடனேயே அணுக வேண்டும். பிரச்னைகளை உண்டாக்கிக் கொண்டால்தான் தங்கள் பிழைப்பு நடக்கும் என்று கடை நடத்தக் கூடாது. தரப்படுகின்ற மதிப்பையும் மரியாதையையும் தரத்தை உயர்த்திக்கொள்ளப் பயன்படுத்திக்கொள்ள கட்சிகள் முனையவேண்டுமேயன்றி — மதிப்பை மரியாதையை வைத்துக்கொண்டு பிரச்னைகளை உருவாக்க முனைவது நம்பிக்கைத் துரோகமாகும். தமிழகத்தில் 'தேரோ' முறை அனுமதி பெருததாகும், அனுமதிக்கக் கூடாத முறையுமாகும், உரிமைகள் என்பது ஒரு சாரார்க்கு மட்டுமல்ல —இருதிறத்தாருக்குமே உண்டு. கேட்பவர்க்கும் — கேட்கப்படுபவர்க்கும் உரிமைகள் உண்டு! அடிப்படை உரிமைகளும் உண்டு. தொழில் செய்வோர்க்கும் பிரச்னைகள் உண்டு—தொழில் நடத்துவோர்க்கும் பிரச்னைகள் உண்டு. யாருடைய உரிமையும் பாதிக்கப்படாத அளவுக்குதான் தீர்வுகள் எதிர்பார்க்கப்படவேண்டும். அதுதான் நம்பகமான எதிர்கால நல்வாழ்வுக்கு நல்வித்தாக இருக்க முடியும். இந்த முறையில் தமிழகக் கட்சிகள், பிறமாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக இயங்கும் என்று எதிர்பார்க்கலாமா?

## ஒத்திப்போடு!

நாலாவது ஐந்தாண்டுத் திட்டம் 1966–ம் ஆண்டு ஏப்ரல் திங்களிலே தொடங்கப்படவேண்டியதாகும். 1951–ம் ஆண்டு, முதன் முதலாகத் தொடங்கப்பட்ட முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து 1966 உடன் முடிந்த திட்டப் பயன்களால், துணைக் கண்டத்தின் பொருளாதாரம் சீர் குலைந்தது—சுமக்க முடியாத வரி பாரத்தைப் பாமரன் ஏற்கவேண்டியவனுனன், அதனுல் திட்ட அளவைக் குறையுங்கள்; தேவைக்குத் தகுந்த திட்டமிடுங்கள் என்று நல்லோர் எடுத்துக் காட்டியபோதெல்லாம் கனல் கண் காட்டிய மத்திய அரசு, நாலாம் திட்டத்தைப் பொருளாதார நெருக்கடி காரணமாக 1969-ம் ஆண்டு ஏப்ரல் முதல் நடை முதல்படுத்தத் திட்டமிட்டிருக்கிறதாம்! நிதி வசதிகளைத் திரட்டினுல், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தினுல், உற்பத்தியைப் பெருக்குவதில் முனைந்தால் அடுத்த ஆண்டுத்திட்டம் — நடப்பு ஆண்டுத் திட்ட அளவுக்கு உயரும் என்று எதிர்பார்க்கும் அவலத்தை என்னென்பது! அட ஐந்தாண்டுத் திட்டங்களா!

—தொகுப்பு: ராஜிமணளன்.

## சாதனையும் பாராட்டும்!

தமிழ் நாட்டில் தி. மு. கழகம் பலத்த பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்திருக்கிறது.

தி. மு. கழகம் ஆட்சிக்கு வந்தபின் தமிழ் நாட்டில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இங்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுக்கப்படுகிறது. வங்கத்தில் இதே அரிசி ரூ. நான்காக விற்கிறது.

தமிழ் நாட்டில் உணவுப் பிரச்சினை நல்ல முறையில் தீர்க்கப்பட்டிருக்கிறது.

வங்காளத்தில் நெல் பயிரிடப்படவேண்டிய இடங்களிலெல்லாம். சணல் விளைகிறது. அதனுல் மத்திய சர்க்காருக்கு ஏராளமான அந்நியச் செலவாணி கிடைக்கிறது.

ஆகவே வங்காளத்திற்கு டெல்லி அரசுதான் உணவு தர வேண்டும். ஆனுல் அது சரியானபடி தருவதில்லை.

தமிழ் நாட்டில் தி. மு. கழகம் ஆட்சிக்கு வந்தபின் உணவு நிலையில் தமிழ் நாடு முன்னேற்றம் கொண்டிருப்பதற்காகப் பாராட்டுகிறேன்.

—வங்க அமைச்சர் ஹேமந்த் குமார்போஸ்
(சென்னைக் கடற்கரையில் 11—11—67
அன்று நடந்த தேவர் பிறந்தநாள் விழாவில்)

# சாதனைப் பட்டியல்! சிங்கள ஏட்டின் தொகுப்பு!!

தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி 20 வருடங்களாக ஆட்சி நடத்தியபின் கடந்த பிப்ரவரியில் நடந்த பொதுத் தேர்தலில் படுதோல்வியடைந்து திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பின் கடந்த ஆறுமாத காலத்தில் தமிழ்நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ள மாற்றங்கள் அனுகூலங்கள் குறிப்பிடத்தக்கனவாகும்.

தி. மு. க. ஆட்சிக்கு வந்த 9 மாதங்களில் மக்களுக்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி விநியோகிக்கும் திட்டம் அமுலுக்கு வந்தது ஒரு மகத்தான சாதனையாகும். இது தமிழக அரசின் புதிய பொருளாதாரக் கொள்கையாகும். இதை அனைத்திந்தியாவும் பாராட்டுகிறது.

நீண்டதூர பஸ்களுக்குரிய கட்டணங்கள் குறைக்கப்பட்டதால் அடிக்கடி பிரயாணம் செய்யும் மக்கள் மிகுந்த பயனடைந்துள்ளனர்.

சென்னை மாநகர ஆட்சி ஒரு லட்சத்து 40 ஆயிரம் பள்ளிப் பிள்ளைகளுக்கு ரூ. 6 லட்சம் செலவில் இலவசமாகப் பாடப் புத்தகங்கள், சிலேட்டுகள், பென்சில்கள் வழங்கியது; இந்தியாவின் சரித்திரத்திலேயே எந்த மாநகர ஆட்சியும் செய்து அறியாத காரியமாகும்; வரலாறு காணாத புதுமையாகும்.

காங்கிரஸ் ஆட்சி கடந்த ஆண்டில் கல்விக்காகச் செலவிட்டது ரூ. 46 லட்சமாகும். ஆனால் இந்த ஆண்டு தி. மு. க. ஆட்சியின் கீழ் கல்விச் செலவு ரூ. 54 லட்சமாகும். 15-9-67 முதல் 22-9-67 முடியவுள்ள ஒரு வாரத்தில் மட்டும் அமைச்சர் கருணாநிதி புதிதாக பத்து பள்ளிகளை ஆரம்பித்துவைத்தார். பொன்மலையில் காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் மூடப்பட்ட தனியார் பள்ளி ஒன்று தி. மு. க. அரசு வந்ததும் திரும்ப ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் பி. யூ. சி. வரை இலவசக் கல்விமுறை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

சுயமரியாதைத் திருமணங்களைச் செல்லுபடியாக்கும் சட்டத்தை தி. மு. க அரசு கொண்டுவந்துள்ளது. கைத்தறித் தொழிலுக்கு நூல் விநியோகம் போன்றவற்றில் போதிய பாதுகாப்பு விதிகளை தி. மு. க. அரசு அமுலுக்குக் கொண்டுவந்துள்ளது.

சென்னை மாநிலத்துக்கு 'தமிழ் நாடு' என்று பெயர் வைத்துள்ளதுடன் சகல அரசாங்க அலுவலகங்களிலும் தமிழ்ப் பெயர்ப்பலகைகளிலும் தமிழ் வார்த்தைகளே எழுதப்பட்டு வருகின்றன.

விவசாயத்துறையில் புதிய ஆட்சி தீவிர கவனம் செலுத்தி விவசாயிகளுக்குப் பெருமளவில் பல உதவிகளும் அளித்து வருவதன் விளைவாக கடந்த மாதங்களில் நெல் விளைச்சல் அதிகரித்துள்ளது. தஞ்சை ஜில்லாவில் ஏ. டி. டி. 27 ரக நெல்விதை உபயோகிக்கப்பட்டதன் விளைவாக மொத்த மகசூல் கணிசமான அளவுக்கு அதிகரித்துள்ளதென்பது கண்கூடு.

சென்னை நகரமக்களுக்குக் காவிரி நதி தண்ணீரைக் கொண்டு வரும் பொருட்டு புதிய ஆட்சி இதுவரை ரூ. 10 லட்சத்துக்கும் கூடுதலான தொகையைச் செலவு செய்துள்ளது. வீராணம் ஏரித் தண்ணீரையும் சென்னை மக்களுக்குக் கிடைக்கச் செய்ய தி. மு. க. ஆட்சி தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

சென்னை நகரெங்கும் வருடம் பூராவும் துர்நாற்றத்தைப்பரப்பிவரும் கூவம் நதியைச் சுத்தம் செய்வதற்கென ரூ. 2 கோடி ஒதுக்கி உடனடியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

காந்தியடிகள் பிறந்த தினமாகிய அக்டோபர் 2-ம் தேதி முதல் மதுரை நகரில் மக்களுக்கு ஒரு லிட்டர் பால் 88 காசுகளுக்கு மலிவு விலையில் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

மிகக் குறுகிய காலமான 6 மாதங்களில் தி. மு. க. அரசு காண்பித்துள்ள பிரமிக்கத்தக்க சாதனைகளைச் சில காங்கிரசார், இப்பொழுது பதவியை இழந்த ஏக்கத்தில் தி. மு. க. ஆட்சிக்கு எதிராக மக்களிடையே கலகத்தைத் தூண்டிவிடும் சூழ்ச்சியில் இறங்கியுள்ளனரென்று நடுநிலை அரசியல் விமர்சகர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

சுதந்திரத்துக்குப் பிறகு காங்கிரஸ்காரர்கள் இந்தியாபூராவிலும் ஆட்சி பீடத்தில் இருந்தபின் 1952-ல் பொதுத் தேர்தலில் மக்களிடம் வோட்டுக் கேட்க வந்தபொழுது தமிழ் மக்கள் காங்கிரஸ்காரரிடம் கடந்த ஐந்து வருடங்கள் நீங்கள் மக்களுக்கு அளித்த அனுகூலங்கள் என்ன? உங்களுடைய சாதனைகள் என்ன? என்று தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டங்களில் கேள்விக் கணைகளைத் தொடுத்தனர். ஆனால் இன்றைய அகில இந்திய காங்கிரசின் தலைவராகப் பதவி வகிக்கும் திரு. காமராஜர் அன்று 'காங்கிரஸ் ஆட்சிக்கு ஐந்து வயதுதானே ஆயிற்று! சிறு பாலகனால் பிரியாணி தின்னமுடியுமா?'எனபதிலளித்தார்.

ஆனால் அதே காமராஜர் இன்றையதினம் ஆறு மாதமாக கர்ப்பமாகி இருக்கும் தாயின் வயிற்றுக்குள்ளிருக்கும் சிசுவைப் பார்த்து 'நீ மக்களுக்கு என்ன நன்மைகள் செய்துவிட்டாய்?'' என்று கேட்பது போன்று ஆறு மாத மட்டுமே ஆட்சி நடத்தியுள்ள தி. மு. க. அரசைப் பார்த்து பொதுக்கூட்டங்களில் தி. மு. க. ஆட்சி என்ன சாதித்துள்ள... என்று கேள்விகளைக் கே... கண்டு திரு. காமராஜரின் ... பற்றி நடுநிலைமை நோக்கர்க... தாபப்படுகின்றனர்.

இவை ஒருபுறமிருக்க, பழம்... தேசியவாதியும் காங்கிரஸ்... ரும் விநோபாஜியின் சர்வோ... இயக்கத் தலைவருமான ஜெ... காஷ் நாராயண் அண்மையில் சென்னைக்கு வந்திருந்தபொழுது தமிழக ஆட்சிபற்றி நிருபர்களிடம் கீழ்க் கண்ட கருத்தை வெளியிட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழகத்தில் தி. மு. க. ஆட்சி இந்தியாவிலுள்ள ஏனைய காங்கிரஸ் அல்லாத சர்க்கார்களையும்விட மிகச் சிறந்த முறையில் நிர்வாகத்தை நடத்தி வருகிறது.

மதுவிலக்குக் கொள்கையில் சில மாகாணங்களிலுள்ள காங்கிரஸ் அரசுகள்கூட காந்தீய போதனைகளையும், அரசியல் சாதனத்தையும் மீறி, மதுவிலக்குவிதிகளைத் தளர்த்தியும் ரத்துச் செய்தும் மதுவிலக்குக்குக் குழிதோண்டுகின்றன. ... தி. மு. க, அரசு ஒன்றுதான் ... இந்தியாவில் காந்தீய தத்... தைக் கடைப்பிடித்து மதுவி... கடுமையாக அமுல் செய்... தீவிர கவனம் செலுத்திவருகி...

—'செய்தி' என்ற இதழில் எஸ்... என்பவரது விமர்சனம்.

---

சேலம் மாவட்ட ...
சட்ட மன்ற உறுப்பின...

பி. பெரியசாமி இராசிபுரம்.
கே.ஆர். கோவிந்தராசன் தாரம...
டி. பொன்னுமலை, பனைமரத்துப்...
ஏ. ஆறுமுகம், இடைப்பாடி.
கே. என். சிவப்பெருமான் ...

# வலியா? ஜலதோஷமா?





## பத்து சக்திமிக்க மருந்துகள் சேர்ந்தது

# அமிர்தாஞ்சனம்

## உங்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கிறது

சக்தி வாய்ந்த பத்து மருந்துகள் கொண்ட அமிர்தாஞ்சனம் வலிகளைப் போக்கி ஜலதோஷத்தை நீக்குவதற்கென்றே பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டது. எழுபது ஆண்டுகளாக லட்சக் கணக்கான குடும்பங்களில் பயன்பட்டு வரும் கைகண்ட நிவாரணி அது.

**வலிகளுக்கு:** தசைவலி, தலைவலி, சுளுக்கு, அல்லது மூட்டு வலி எதுவாக இருந்தாலும், வலியுள்ள இடத்தில் சிறிது அமிர்தாஞ்சனம் தடவுங்கள். சில நிமிடங்களில் நிவாரணம் ஏற்படுவதை உணர்வீர்கள்!

**ஜலதோஷத்துக்கும், மார்புச் சளிக்கும்:** சாதாரண ஜலதோஷமானால் மூக்கின் உட்புறத்திலும் மூக்கின் கீழும் அமிர்தாஞ்சனம் தடவுங்கள்; அல்லது சிறிதளவு அமிர்தாஞ்சனம் எடுத்து வெந்நீரில் இட்டு, ஆவியை சுவாசியுங்கள். மார்புச் சளியானால், மார்பில் அமிர்தாஞ்சனம் தடவுங்கள். மிகமிக விரைவில் நல்ல நிவாரணம் ஏற்படுவதைக் காண்பீர்கள்.

ஒவ்வொரு முறை பயன் படுத்துவதற்கும் சிறிதளவு அமிர்தாஞ்சனமே போதும்; ஆகவே ஒரு பாட்டில் உங்கள் குடும்பத்துக்கு மாதக் கணக்கில் வரும். அமிர்தாஞ்சனத்தை எப்பொழுதும் கையோடு வைத்திருங்கள்.

அமிர்தாஞ்சனம் கையடக்கமான, குறைந்த விலை டின்களிலும் கிடைக்கிறது.




அமிர்தாஞ்சன் லிமிடெட்,
மதராஸ்•பம்பாய்•கல்கத்தா•டெல்லி.

AM/3768

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.